அறைவு 04 இயம் 32 March 12-18, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
LIFE SKILL
UK SPONCER
VISA
CALL:
0770203201


HELLO MOBILE
WORLD
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல்

## நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறதா நிர்வாகம் ???

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத் தமிழ் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாங்குதலில் ஒன்பது மாணவர்கள் நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த இத்தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல் பட்டப்பகலில் நடத்தப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான சிங்கள மாணவர்கள் இம்மாணவர்களைத் தாக்கும் போது விரிவுரையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பார்வையாளர்களாக இருந்ததாக நம்பத்தகு செய்திகள் கிடைக்கப் - பெற்றுள்ளன.

விரிவுரையாளர்களையும் தள்ளி விட்டு வந்தே தம்மீது....

பக் 17



## "காணாமலாக்கப்பட்டோருக்கு வழங்க ஒப்புக்கொண்ட சான்றிதழ் எங்கே?"

## "விடுதலைப் புலிகளால் கடத்தப் பட்டவர்களையும் கண்டு பிடிக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு"

-சபையில் சம்பந்தன் நீண்ட உரை -



காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக வழங்கப்பட - வேண்டிய சான்றிதழுக்கு என்ன நடந்தது? என சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

"ஐயா! கடந்த வருடம் டிசம்பர் மாதம் என்று நான் நம்புகின்றேன் அக்காலப் - பகுதியில் நீங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் சமவாய ஒப்பந்தத்தில்........

பக் 17

## சிங்களவர்களை வெளியேற்ற சதி



வடக்குகிழக்கில் உள்ள சிங்கள மக்களை வெளியேற்றும் சதி நடைபெறுவதாக பொதுபல - சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இச்சதியின் அடிநாதமாக இருப்பது வடக்குகிழக்கின் இணைப்பாகும். அவ்வாறு வடக்கையும் - கிழக்கையும் இணைப்பதன் ஊடாக அங்கு வாழும் சிங்கள மக்களை அகற்றும் சதி அரங்கேற இருக்கின்றது. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்படப் பலர் இவ்விணைப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 4ம் திகதி இந்தச் சதி அரங்கேறத் தொடங்கியுள்ளது. வடமாகாண சபையின் பின்புலத்தில் இயங்கும் தமிழ்த்தேசியக் கூட்ட - மைப்பின் உந்துதலுடன் இச்சதி நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இந்நடவடிக்கையின்

ச 103.1
International online radio
Saththam சத்தம்
இது இசையின் சத்தம்
திருகோணமலை எங்கும் துல்லியமான அலைவரிசையில் Jewel Lanka நேரடிக்கலையகத்தில் இருந்து
March 2016
16, 17, 18, 19, 20
Hotline:- 026-3200320
அனுசரனையாளர்கள்
Sellammah
RIO CERAMICS
ESOFT
SS DIGITAL'S
MLS
Jewel Lanka

திருகோணமலையில் முதன் முதலாக நேரடி ஒலிபரப்புச் சேவை
சத்தம் FM 103.1
MARCH 16,17,18 19,20
கேட்டு மகிழுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# தொடர்புறும் பேச்சும் தொடர்புறாச் செயலும் !

தமிழ்த் தேசிய இனம் தற்போது எதிர்கொண்டுள்ள நிலையானது திரிசங்கு சுவர்க்கம் என்ற அடைமொழியினால் வெளிப்படுத்தக் கூடிய இரண்டும் கெட்ட நிலை என்பதைப் பல செயற்பாடுகள் வெளிப்படுத்தி வருகின்றன.

நல்லாட்சி என்ற கோதாவில் அரசுக் கட்டேறியுள்ள கூட்டரசாங்கமானது தனது சகல வலுவையும் பயன்படுத்தி சர்வதேச சமூகத்தைத் திசைதிருப்பும் முயற்சிகளில் வெற்றி கண்டு வருகின்றது.

சிறீலங்காவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த வருடம் கொண்டு வரப்பட்ட பிரேரணையை தானும் ஆதரித்தததன் ஊடாக சர்வதேசச் சமூகத்தினை திசைதிருப்பும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

அவ்வாறு ஆதரவு தெரிவித்ததுடன் நிற்காமல் அப்பிரேரணையில் முன்மொழியப்பட்ட பல விடயங்களை நிறைவேற்றவும் உடன்பட்டது தற்போதைய அரசு.

அதேவேளை ஐக்கியநாடுகள் சபைக்கு வெளியே, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் மீது செல்வாக்குச் செலுத்தத் தக்க நாடுகளுடன் நடைபெற்ற தனிப்பட்ட பேச்சுக்களின் போது கூட்டரசானது ஸ்திரமற்ற நிலையில் இருப்பதால் அவ்வரசைக் காப்பாற்றிக்- கொண்டால் மட்டுமே மேற்குலகுடன் பொருந்திப் போகத்தக்க அரசு சிறீலங்காவில் நிலைத்திருக்கும் என்பதும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை மெதுவாகத் தீர்த்து வைக்கும் முயற்சிகள் எண்ணிக்கையில் பெருத்த சமூகத்தை அசூசைக்கு உள்ளாக்காமல் நடைபெறும் என்பதையும் அரசு வெளிப்படுத்தி தம்மீது மேற்குலகால் ஏற்படுத்தத்தக்க அழுத்தங்களையும் தற்போதைய அரசு குறைத்துக் கொண்டது.

அதன்பின்னரே சர்வதேசத்தில் பேசும் போது சிறீலங்கா அரசின் பேசவல்ல அதிகாரமுடையோர் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாகப் பேசிவந்தாலும் கூட அவைசார்ந்த எந்தச் செயற்பாடுகளையும் உள்நாட்டில் முன்னெடுக்கத் தவறி வருவதை அல்லது அவ்வாறு முன்னெடுக்கக் காலம் தாழ்த்தி வருவதைக் காணலாம்.

இதனைப் புரிந்துகொள்வதற்கு ஐநாவில் சிறீலங்கா அரசு உடன்பட்ட பல விடயங்களில் இரண்டு விடயங்களான பயங்கரவாதத் தடைச்சட்டதின் நீக்கம், செயற்றினற்ற காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறியும் சானதிபதி ஆணைக்குழுவான பரணகம ஆணைக்குழுவிற்குப் பதிலான புதிய வகை அனுகுமுறை ஆகிய இரண்டு தொடர்பாகவும் அரசின் உள்நாட்டு நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பதை அவதானித்தாலே போதுமானது.

உலகில் எந்வொரு நாட்டிலும் கொண்டு-வரப்படாத, மனித உரிமைச் சட்டங்களை கடுமையாக மீறும் பயங்கரவாதத் தடைச்சட்டமே சிறீலங்காவில் தற்போதும் அமுலில் உள்ளது. ஆனால் அந்தத் தடைச்சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவோம் என ஏற்றுக்கொண்ட சிறீலங்கா அரசானது அம்மாற்றத்தைக் கொண்டுவரும் செயற்பாடுகளை ஆமை வேகத்தில் நிகழ்த்திவருகின்றது. இதோ கொண்டு வருகின்றோம் என அடிக்கடி ஊடக அறிக்கைகள் மட்டுமே வெளியாகியுள்ள நிலையில் இம்மந்தகதிச் செயற்பாடானது சிறீலங்காவின் வலுமிக்க கூட்டு எதிரணியானது அச்சட்டத்தின் மாற்றத்திற்கு எதிராகச் சிந்திக்கவும் செயற்படவும் போதுமான கால அவகாசத்தை வழங்கியுள்ளது. தற்போது இச்சட்டத்தை நீக்க அல்லது மாற்ற முயற்சிப்பதானது தமிழீழம் மலர்வதற்கான முதற்படி என்ற அறிக்கைகளை விடும் அளவிற்கு கூட்டு எதிரணியை தயாராக்கி விட்டுள்ளது.

அதே போலவே காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறியும் ஆணைக்குழுவானது தனது அமர்வுகளைத் தொடர்ந்து நிகழ்த்தி வருவதுடன் காணாமலாக்கப் பட்டோரைக் கண்டறியும் செய்ற்பாட்டை விடுத்து அவ்வாறு காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு நிவாரணங்கள் வேண்டுமா என்பதை அறிய முற்பட்டுள்ளது.

சர்வதேசத்திடம் சிறீலங்கா அரசு தான் செய்வேன் எனப் பல விடயங்களை ஏற்றுக்கொண்டபோது உள்நாட்டுத் தமிழ் மக்கள் சொர்கம் புகத் தயாராகி மண்ணிலிருந்து பறக்கத் தொடங்கினர். ஆனால் பல மாதங்கள் கடந்துள்ள நிலையில் அவர்களின் இந்த மனோரதம் மண்ணிலும் இன்றி விண்ணிலும் இன்றி இடைநடுவில் நிற்கின்றது. இந்த ஏமாற்றத்திற்கு எதிராகப் போரிட முற்படும் மக்களின் முயல்வுகளையும் அடக்கி வாசிக்கத் தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் முயல்கின்றனர்.

"தற்போதுள்ள அரசைக் குழப்பாதீர்கள் - கப்பலைக் கவிழ்க்காதீர்கள்" என அவர்கள் மக்களின் திரிசங்கு நிலையைத் தொடர்ந்தும் பேண முயற்சிப்பதை விடுதலை கோரி உண்ணாநோன்பிருப்போரைப் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரியிருப்பதில் இருந்து புரிந்துகொள்ள முடிகின்றது.

## "ஆசிரியர்கள் வேண்டும்" மாணவர்கள் போராட்டம்

திருகோணமலை, குச்சவெளி கோட்டத்திலுள்ள அந்நூரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக கடந்த செவ்வாய் (08) அன்று மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்றிணைந்து ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



அந்நூரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 36 ஆசிரியர்களுக்கு 21 பேரும், அந்நூரியா கனிட்ட பாடசாலை 12 ஆசிரியர்களுக்கு 05 ஆசிரியர்களும், இலந்தைகுளம் அரசினர் முஸ்லிம் வித்தியால-யத்தில் 07 ஆசிரியர்களுக்கு 03 மூவரும் கடமையாற்றுகின்றனர் என பெற்றோர்களும் பாடசாலை அபிவிருத்தி குழுவினரும் தெரிவிக்கின்-றனர்

போராட்டத்தினை அடுத்து கல்வி அமைச்சில் உரிய அதிகாரிகளுடன் மக்கள் பிரதிநிதிகள் பேச்சுக்களை நடாத்தி-யுள்ளனர்.

இப்பேச்சுக்களின் போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

|ரபாய்தீன் பாபு

## இந்தியக் கலைஞர்களின் ஆடற்கலைவிழா

கிழக்கு மாகாண பண்பாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் ,ந்திய நடனக் கலைஞர்கள் ஸ்ருதி, மற்றும் அவரது துணைவர் பாஷ்வநாத் உபாத்தியா ஆகியோரது நடன நிகழ்வு வியாழக்கிழமை 10.03.2016 மாலை உவர்மலை விவேகாநந்தா கல்லூரியில் நடத்தப்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய கால்நடை அமைச்சர் கி.துரைராஜசிங்கம், மாகாண பிரதம செயலாளர் அபேகுணவர்த்தன கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் , பண்பாட்டு பணிப்பாளர் சி.வில்வரெத்தினம் ஆகியோர் வருகை தந்திருந்ததுடன், ஸ்ரீ லலிதாம்பிகை தேவஸ்தானம் ஸ்வாமி ஸ்வஸ்தானந்தா மங்கல விளக்கேற்றியதுடன் இந்திய கலைஞர்களுக்கு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தனர்.



வேலைவாய்ப்பு
மைக்ரோசொவ்ட் ஓவ்வீஸ் தெரிந்த உயர் தரத்தில் கணக்கீடு கற்ற பெண் ஒருவருக்கு வேலைவாய்ப்பு உண்டு - 0777 555 738

## "அலை ஓசை" - காலாண்டுச் சஞ்சிகை வெளியீடு

திருகோணமலை மறை மாவட்ட அலைஓசை கலைத்தொடர்-பகத்தினால் சமய-சமூக-இலக்கிய சஞ்சிகையாக அலை ஓசை சஞ்சிகை நாளை (13) காலை 10.30 மணிக்கு திருகோணமலை மறைக்-கல்வி நடுநிலையக் கேட்போர் கூடத்தில் வெளியிடப்படவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவினை அதி வந்தனைக்குரிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமை தாங்கி நடாத்தவுள்ளார்.

அலை ஓசை சஞ்சிகையானது சிறுகதைகள், சமய சமூக இலக்கியம் தொடர்பான கட்டுரைகள், பொது அறிவுத் துணுக்குகள், நகைச்சுவைத் துளிகள், சுக நலக் கட்டுரைகள், சம கால அரசியல், பொருளாதாரப் போக்குகள், திரைப்பட விமர்சனங்கள், கவிதைகள், பாலர் பாக்கள், காட்டூன்கள் போன்றவற்றைத் தாங்கிவருவதாகக் தெரிவித்துள்ள சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர், இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஆக்கங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆக்கங்களை அலைஓசை கலைத் தொடர்பகம், 17, புனித அந்தோனியார் வீதி, திருகோண மலை என்ற முகவரிக்கோ அல்லது என்ற trincoalaiosai@gmail.com மின்னஞ்சலுக்கோ அனுப்ப வைக்க முடியும்.

## சிறந்த விவசாயிகளுக்குப் பரிசு

| நிக்கி

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 2015ற்கான சிறந்த விவசா்யிகளுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த (09.03.2016) திருகோணமலை அன்புவழிபுரத்தில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.


பிரதம அதிதியாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே.துரைராஜ-சிங்கம் கலந்ததுகொண்டு சிறந்த விவசாயிகளுக்கான சான்றிதழ்களையும் பரிசில் களையும் வழங்கிவைத்தார். இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு 1ம் இடம், மூன்று 2ம் இடம், ஒரு 3ம் இடம் அடங்கலாக 5 பரிசுகளும், அம்பாறை மாவட்டத்திற்கு மூன்று 1ம் இடம் இரண்டு 3ம் இடம், அடங்கலாக 5 பரிசுகளும், திருகோணமலை மாவட்டத்திற்கு ஒரு 1ம் இடம், இரண்டு 2ம் இடம், இரண்டு 3ம் இடம் அடங்கலாக 5 பரிசுகள் இங்கு வழங்கிவைக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

# சட்டமா அதிபர் உறுதிமொழி
## உண்ணாவிரதத்தை கைவிட்டனர் அரசியல் கைதிகள்



சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து கடந்த 18 நாட்களாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரும் நேற்று வெள்ளிக்கிழமை பகல் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர். மிகவிரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் சார்பாக நீதின்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி நவாவி உறுதியளித்தார். இதற்கமைய தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டதாக தமிழ் அரசியல் கைதி மேலும் கூறினார்.

நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நவாவி, போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு ஏற்ற வகையில் போதியளவு குற்றச்சாட்டுகள் காணப்படுவதாக தெரிவித்துள்ளார். இதனால் கூடிய விரைவில் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சட்டத்தரணி மன்றில் தெரியப்படுத்தினார்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் அளவிற்கு குற்றச்சாட்டுகள் காணப்படும் தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்பிவைக்க முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதாக தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

நீண்டகாலமாக தடுப்பிலுள்ள தங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் வழக்குத் தாக்கல் செய்யுமாறும், அல்லது புனர்வாழ்விற்கு அனுப்புமாறும் கோரி மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 14 பேர் கடந்த மாதம் 23ஆம் திகதி முதல் இன்று வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் அமைப்புக்கள்
## தனியாக மங்களவுடன் சந்திப்பு

ஈழத்தமிழர்களின் நீதிக்கான பயணத்திலே ஐ.நா மனித உரிமைகள் சபை முக்கிய பேசு பொருளாக மாறியிருக்கின்றது. இந்த நிலையில், புலம்பெயர் அமைப்புக்கள் தமிழ் மக்களுக்கு தங்களுடைய நிலைப்பாட்டினைச் சொல்ல வேண்டிய காலமாக இது இருக்கின்றது. புலம் பெயர் அமைப்புக்களுடன் பேசி இருக்கின்றோம். அந்த அமைப்புக்களுடன் மாநாட்டை நடாத்தப் போகின்றோம் என இலங்கையினுடைய வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கின்றார்.

சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டிய காலம் வந்துள்ளது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஊடகத் துறை மற்றும் மக்கள் வெகுசனத் தொடர்பு துறைக்குப் பொறுப்பான அமைச்சர் சுதன்ராஜ் தெரிவித்துள்ளார்.



# எரிந்த நிலையில் சடலங்கள் மீட்பு



தங்கொட்டுவ புதகம்பல பகுதியில் பாழடைந்த வீதியில் தீப்பற்றி எரிந்த வேனொன்றிலிருந்து சடலங்கள் பல மீட்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். 119 என்ற அவசர இலக்கத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய அங்கு விரைந்த காவல்துறையினரால் குறித்த சடலங்கள் மீட்கப்பட்டதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் உதவிப் காவல் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார். மீட்கப்பட்ட சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும், சம்பவம் இடம்பெற்றுள்ள இடத்திற்கு காவல் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# கடலட்டைகளுடன் 42 பேர் கைது

பல்லேகுடா



இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கிரிமுந்தலம் பிரதேசத்திற்கு கொண்டு வரப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 621 கிலோகிராம் கடலட்டைகளுடன் 22 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர பல்லேகுடா கடற்பகுதியில் சட்டவிரோதமாக கடலட்டைகளை பிடித்துக் கொண்டிருந்த 20 பேர் 220 கிலோகிராம் கடலட்டைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் கடலட்டைகளை புத்தளம் மற்றும் கிளிநொச்சி கடற்றொழில் விசாரணை அலுவலகத்திடம் ஒப்படைத்திருப்பதாக கடற்படை தெரிவித்துள்ளது.

# கடுமையான நிபந்தனைகளுடன்
## பசில் - ரணவக்க பிணையில் விடுதலை



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோர் கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது திவிநெகும திணைக்களத்திற்கு சொந்தமான 2 கோடி ரூபா செலவில் நிதியை ஒதுக்கி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவு வழங்கும் வகையில் 50 இலட்சம் நிழற்படத்தை அச்சிட்டமை தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. நேற்றைய வழக்கின் போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இருவருக்கும் தலா 5 இலட்சம் ரூபா ரொக்கப்பிணையும் தலா 50 இலட்சம் ரூபா சரீரப்பிணையும் விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த இருவருக்கும் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் கட்டுநாயக்க மற்றும் மத்தளை சர்வதேச விமான நிலைய அதிகாரிகளுக்கும் அரச புலனாய்வு பிரிவு திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இது தொடர்பில் அறிவிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் சாட்சியாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வார்களாயின் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# சர்வதேச தலையீடு அவசியம் - பீல்ட் மார்ஷல்

இலங்கை தொடர்பில் மேற்கொள்ளும் ஜெனீவா விசாரணைகளின் போது சர்வதேச ஆலோசகர்கள் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் கண்காணிக்க வேண்டும் என யுத்தத்தை முன்னெடுத்த இராணுவ தளபதி என்ற ரீதியில் வேண்டுகோள் விடுப்பதாக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சட்டதிட்டங்களை பின்பற்றியே யுத்தத்தை முன்னெடுத்ததாகவும், சட்டங்களை மீறியவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் வெள்ளைக்கொடி விவகாரத்தில் மூன்று வருடங்கள் தான் சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையானதாகவும், இந்த விடயம் தொடர்பில் உண்மையை கண்டறிய கட்டாயம் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

# குற்றங்களை ஒப்புக் கொண்டார்
## முன்னாள் நா.உ தமிந்த சில்வா



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, கடந்த 2011ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரையான சொத்துக்களை வெளிப்படுத்தவில்லை என்று, அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கில், குற்றங்களை ஒப்புக் கொண்டார். அத்துடன், இது தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள மூன்று வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவருவதற்கும் அவர் நேற்று, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இணக்கம் தெரிவித்தார்.

அவர் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, "துமிந்த சில்வா, குற்றங்களை ஒப்புக்கொண்டு, இந்த வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவர இணக்கம் தெரிவித்துள்ளார்" என, நீதவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு, எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# 60 இலட்சம் ரூபா மூன்று சரீரப் பிணையில்
## தேரர் விடுவிப்பு



60 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணையில் சட்டவிரோதமான முறையில் யானைக்குட்டி ஒன்றை வைத்திருந்த கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த உடுவே தம்மாலோக தேரரை விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலஞ்சென்ற அஸ்கிரி பீட மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய கலகம அத்ததஸ்ஸி தேரரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும் என உடுவே தம்மாலோக தேரரின் சட்டத்தரணி கூறியதை அடுத்தே அவருக்கு பிணை வழங்குமாறு நீதிமன்றை உத்தரவிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர்ச் செய்திகள்

## கஞ்சா வைத்திருந்தவர் கைது

திருகோணமலைப் பிரதேசத்தில் கஞ்சாவைத் தம்வசம் வைத்திருந்த நபரொருவரை, இம்மாதம் 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் ஹயான் மீ ஹககே, கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார். திருகோணமலை, சமுத்திராகமப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையை ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், கஞ்சா வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை காவல்துறையினர் கைதுசெய்ததுடன், அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு கிலோகிராம் கஞ்சாவையும் திருகோணமலை நீதிமன்ற நீதவானிடத்தில் முன்னிலைப்படுத்தினர். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளைத் திருகோணமலை காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரசித்தி பெற்ற காளி கோவிலின் வருடாந்த பிரமோற்சவ திருவிழா

– சேனையூர் நீரூபர் –



ஈழத்திரு நாட்டின் தெட்சன கைலாயம் என வர்ணயிக்கப்படும் அடிக்கொரு சிவலிங்கம் உள்ள புண்ணிய சிவ பூமியான திருகோணமலையில் நகரத்தின் இதயம் போல் விளங்குவது அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமாகும்.

அன்னை பத்திரகாளிக்கு ஆண்டு தோறும் இடம் பெறுகின்ற பிரமோற்றவம் மங்களகரமான மன்மத வருடம் மாசி மாதம் 30ம் நாள் 13.03.2016 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 8.00 மணியளவில் கொடியேற்றம் நிகழ திருவருள் கூடியுள்ளது. அதனைத் தொடர்ந்து பங்குனி மாதம் 9ம் நாள் 22.03.2016 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணிக்கு இரதோற்சவம். பங்குனி மாதம் 10ம் நாள் 23.03.2016 புதன் கிழமை உதயத்தில் தீர்த்தோற்சமும் இரவு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது.

அம்பாளுக்கு வருடாந்தம் இடம் பெருட திருவிழா இவ்வருடமும் மிகச் சிறப்பாக நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே அடியார்கள் ஆசார சீலர்களாகவும் கலாச்சார பண்பாட்டு உடைகளுடனும் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பாளை தரிசித்து அம்பாளின் அருட்கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் வேதாகமாமணி பிரம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் கேட்டுக் கொள்கிறார்.

## களவாடிய சிறுவன் விளக்கமறியலில்

மூதுார் பிரதேசத்தில் பாலநகரைச் சேர்ந்த, உண்டியலைத் திருடிய 15 வயது சிறுவனை எதிர்வரும் 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்ற நீதிவான் ஐ.என்.றிஸ்வான் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார். குறித்த சிறுவன், அயல் வீட்டில் யாருமில்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அங்கிருந்த உண்டியலை திருடியுள்ளதாக விசாரணையின் போது அவன் தெரிவித்ததாக மூதூர் காவல்துறையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சிறுவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## சித்த மருத்துவபீட மாணவர்கள் தாக்கப்பட்டனர்

– சேனையூர் நீரூபர் –

கிழக்குப் பல்கலைக் கழக திருகோணமலை வளாகத்தின் சித்த மருத்துவ பீட தமிழ் மாணவர்கள் 09 பேர் கடந்த 10ம் திகதி இரவு தாக்கப்பட்டு நிலாவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு-ள்ளனர். சித்த மருத்துவ பீடத்துக்குள் நுழைந்த 50க்கும் அதிகமான பெரும்பான்மை இன மாணவர்கள் தம்மை தாக்கியதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தாக்கப்பட்ட ஒன்பது மாணவர்களும் திருகோணமலையைச் சேர்ந்த 02 மாணவர்களும் கல்முனையைச் சேர்ந்த 01 மாணவனும் அக்கரைப்பற்றைச் சேர்சந்த 02 மாணவர்களும் மட்டக்களப்பைச் சேர்ந்த 01 மாணவனும் நீலாவனையைச் சேர்ந்த 01 மாணவனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 01 மாணவனும் நாவலப்பிட்டியவைச் செர்ந்த 01 மாணவனுமாகும்.

தொடர்ச்சியாக சித்த மருத்துவ பீட மாணவர்கள் விளையாட்டுக்களில் வெற்றியடைவதும் தமது திறமைகளை வெளிக்காட்டுவதும் ஏனைய மாணவர்களுக்கு பொறாமையை ஏற்படுத்தி வந்தது.

தம்மை தாக்க வேண்டும் என்பதற்காகவே சிங்கள மாணவன் பகிடிவதை காரணமாகவே வீடு சென்றான் என தம் மீது குற்றம் சுமத்தி தம்மீது காட்டு மிராண்டித் தனமான தாக்குதலை மேற்கொண்டார்கள். மேலும் தமது பேராசிரியர் பவானி அவர்களை தள்ளிவிட்டு விட்டு தம்மை தாக்கியதாகவும் தெரிவித்தார்கள்.

அச்சுறுத்தலாகவுள்ள மாணவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் வரை தாம் வகுப்பு பகிஸ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

மலைமுரசு MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## மூன்று மாத காலப்பகுதிக்குள் விபரங்கள் வெளியிடப்படும்

பிரதமர் தெரிவிப்பு



சிறந்த சட்டத்தரணிகளை அமர்த்தி, வழக்குகளை எதிர்கொள்வதற்குத் தயாராகுங்கள் என்று கூட்டு எதிரணியைப் பார்த்து கேட்டுக்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திருடர்கள் எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதிக்குள் வெளிப்படுத்தப்படுவர் என்றும் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது உதய கம்மன்பில எம்.பி, அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரான மலிக்சமர விக்கிரமவிடம் எழுப்பிய கேள்விக்கு தெளிவுப்படுத்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பங்குச் சந்தை மோசடி ஒன்று தொடர்பில் பிரான்ஸ் உயர்நீதிமன்றத்தினால் 2006ஆம் ஆண்டு குற்றவாளியாகக் காணப்பட்ட ஜோர்ஜ் சொரொ என்பவரை 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற பொருளாதார மாநாட்டுக்குச் சிறப்பு அதிதியாக அழைத்தது ஏன்? என உதய கம்மன்பில கேள்வியெழுப்பினார். அக்கேள்விக்குப் பதிலளிப்பதற்காக இரண்டு வார கால அவகாசம் தேவைப்படுவதாக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவிக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தினார். ஜோர்ஜ் சொரொவை நாம் அழைக்கவில்லை. அந்த மாநாட்டில் பங்கேற்பதற்கு அவர் வந்திருந்தார். அவருக்கு ஒரு சதம் கூட நாம் வழங்கவில்லை. அவரது வருகை தொடர்பில் அவைக்கு முன்னரே நாம் அறிவித்திருந்தோம் என்றார்.

## கைதிலிருக்கும் யோஷித மீது மேலும் குற்றச்சாட்டுக்கள் - வெளியே வந்ததும் விசாரணை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வரான யோஷித்த தற்போது கடற்படை சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு கைதிலிருக்கும் நிலையில், அவர் சிறையில் இருந்து வெளிவந்ததும் கடந்த ஆட்சிக்காலத்தில் உக்ரெய்ன் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் நடத்தப்படும் ஒருவருட கற்கைநெறியொன்றுக்கு 2009ம் ஆண்டில் உப லெப்டினன்ட் அல்லது லெப்டினன்ட் தரத்திலான அதிகாரியொருவரை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அச்சந்தர்ப்பத்தில் பதில் உப லெப்டினன்ட் தரத்திலிருந்த யோஷித அந்த கற்கைநெறிக்கு உக்ரெய்னுக்கு பயிற்சி கற்கைநெறிக்கு எப்படி சென்றார் என்பது தொடர்பில் விசாரணை செய்யப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ருவான் விஜேயவர்தன கடந்த வியாழக்கிழமை சபையில் தெரிவித்தார்.

மேற்படி கற்கைநெறிக்கு மேற்படி தரத்திலான கடற்படை அதிகாரியொருவரை அனுப்புமாறு அப்போது பதவியிலிருந்த ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவரே பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்திருந்ததாகவும் அதன் பிரகாரம் அப்போதைய கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் யோஷித அந்த கற்கைநெறிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை கடற்படையிலிருந்த காலத்தில் 27 தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்ததாகவும் அதில் பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் கடமை ரீதியான பயணங்களைத் தவிர்த்து றகர் போட்டிகளுக்கான பயணங்கள் மற்றும் தனிப்பட்ட பயணங்கள் ஆகியவையும் அடங்குவதாகவும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரினால் இவை அனைத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.



## தனியார் துறையினருக்கான சம்பள அதிகரிப்பு

தனியார் துறை ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள அதிகரிப்பது மற்றும் அடிப்படை சம்பளத்தை 10,000 ரூபாவாக உயர்த்துவது ஆகியவற்றை சட்டமாக்கும் சட்டமூல வரைவை அமைச்சர் ஜோன் செனவிரட்ன நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், தனியார் துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 10,000 ரூபாவாகவும் 2,500 ரூபா ஊதிய அதிகரிப்பும் கடந்த ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்படும். அத்துடன் தனியார் துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை சட்டமூலம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தியமை இதுவே முதல் முறையாகவும் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## ஐ.எஸ் இன் இரசாயன ஆயுத நிபுணர் கைது

ஈராக்

### குர்திஷ்களின் பலமான இடமான இர்பிலில் தடுப்பு




ஈராக்கிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் குழுவின் இரசாயான ஆயுத நிபுணர் ஒருவர் ஐக்கிய அமெரிக்காவால் பிடிக்கப்பட்டதுடன் விசாரணை செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், மேற்குறிப்பிட்ட நபர், கடந்த 2003ஆம் ஆண்டு, ஐக்கிய அமெரிக்கத் தலையீட்டால் அகற்றப்பட்ட ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னின் இரசாயான மற்றும் உயிராயுதங்களுக்கான நிபுணராக இருந்தவர் என கூறப்பட்டுள்ளது.

ஸ்லெய்மன் தாவூத் அல்-அபரி என்று பெயரிடப்பட்டுள்ள மேற்படி நபர், கடந்த மாதம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவர் கைது செய்யப்பட்டதை பென்டகன் உறுதிப்படுத்தவில்லை. எவ்வாறெனினும் ஐ.எஸ்.ஐ.எஸ்க்கெதிரான தீவிரமிக்க தந்திரோபாயமாக, ஐக்கிய அமெரிக்காவின் சிறப்புப் படைகள், ஈராக்கில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதை பென்டகன் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரான்ஸ்

## அத்துமீறியவர் தற்கொலையாளியா என சந்தேகம்

பிரான்ஸ் தலைநகரான பாரீஸில் உள்ள ஆன்மீக சொற்பொழிவு நடத்தப்படும் பள்ளி ஒன்றிற்குள் தற்கொலை படையினர் புகுந்து அங்குள்ள வர்களை பிணையக்கைதிகளாக வைத்துள்ள தாக தகவல்கள் வெளியாகி யுள்ளது. அதைத் தொடர்ந்து இந்த பள்ளிக்கு வெளியே தீவிரவாதி களை வேட்டையாடும் பாதுகாப்பு படையினர் அதிநவீன ஆயுதங்களு டன் காவலில் இருந்து வருகின் றனர். ஆனால், அதே சமயம் பள்ளிக்கு அருகில் சுயநினைவு இல்லாத நபர் ஒருவர் அத்துமீறி பள்ளியில் நுழைந்திருப் பதாகவும் முரண்பட்ட தகவல் வெளியாகி யுள்ளது. இது குறித்து அதிகாரப் பூர்வமான தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

## பட்டினியின் கொடுமையால் மரண விளிம்பில் வாழும் குழந்தைகள்

சிரியா

உள்நாட்டுப் போரில் சிக்கி சின்னாபின்னமாகிக் கிடக்கும் சிரியா நாட்டில் நிலவிவரும் கடுமையான உணவுப் பற்றாக்குறையால் பச்சிளம் தளிர்கள் பட்டினியால் இறந்து வருவதாகவும், இந்த பட்டினி மரணத்தை தவிர்ப்பதற்காக பல குழந்தைகள் ஆடு, மாடுகளுக்கான கால்நடை தீவனங்களை தின்று உயிர் வாழ்வதாகவும் மேற்கத்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



சிரியாவில் கடந்த மாதம் இருதரப்பினருக்கும் இடையில் போர்நிறுத்தம் அமுலுக்கு வந்தபின்னர் ஐக்கிய நாடுகள் சார்பில் ஏராளமான உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டபோதும் அவை வெகுதொலைவில் உள்ள மக்களை சென்றடைவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒரு கிலோ அரிசி சுமார் 15,000 ரூபாய்க்கு கள்ளச் சந்தையில் விற்கப்படுகிறது. சரியான உணவு சாப்பி டாததால் கைக்குழந்தை களுக்கு பாலூட்டும் சக்திகூட இல்லாமல் அங்குள்ள பெண்கள் துடிகின்றனர்.

குழந்தைகள் உள்பட சுமார் 2 இலட்சம் மக்கள் கொடூரமான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நாடு முழுவதும் உள்ள திறந்தவெளி அகதிகள் முகாம்களில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் சத்துக்குறைவால் மரணத்தின் விளிம்பு நிலையில் இருப்பதாகவும் அந்த செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

## அழிக்கழி விபத்துக்குள்ளாவதன் காரணம்??

கூகுள் நிறுவனம் சார்பில் சாரதி இன்றி தானாக இயங்கக்கூடிய கார் வடிவமைக்கப் பட்டு கடந்த ஓராண்டுக்கும் மேலாக சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் அமெரிக்காவில் மட்டும் சுமார் 23 கார்கள் சோதனை ஓட்டத்தில் உள்ளதாக கூறப்படுகிறது.

கலிபோர்னியா மாகாணம், மவுண்ட் ஹில் பகுதியில் கடந்த பிப்ரவரி 14- ஆம் திகதி கூகுள் கார் சோதனை ஓட்டம் நடைபெற்றுள்ளது. அப்போது சாலையோரம் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மணல் மூட்டைகள் மீது ஏறாமல் இருக்க கார் ஒதுங்கி சென்றது. இதில் அதே சாலையில் சென்று கொண்டிருந்த பேருந்தின் பக்கவாட்டில் கூகுள் கார் மோதியது. இதில் பேருந்துக்கும் காருக்கும் சிறிது சேதம் ஏற்பட்டது.

கடந்த 2015 ஜூலை முதல் இதுவரை 14 விபத்துகள் நேரிட்டுள்ளன. இதுகுறித்து கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தவறுகளை திருத்தி வருகிறோம், இனிமேல் விபத்துகள் நேரிடாத வகையில் கூகுள் தானியங்கி காரின் மென்பொருள் மாற்றியமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சர்வ சாதாரணமாக நிகழ்கின்ற மரணங்கள்

மெக்சிகோ



உலகளவில் மெக்சிகோ நாட்டில் தான் அதிகளவு குற்றச்செயல்கள் நடைபெற்றுவருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் சமூக வலைத்தளத்தில் வெளியாகியுள்ள வீடியோ ஒன்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதில், இரண்டு நபர்கள் சண்டையிட்டுகொள்ள ஆயத்த-மாகின்றனர். சுற்றிலும் கையில் துப்பாக்கியோடு இருக்கும் ஏனைய நபர்கள் அவர்களை உற்சாகப் படுத்துகின்றனர். பின்னர் இருவரும் ஆக்ரோசமாக சண்டையிட்டு கொள்கின்றனர்.

சில வினாடிகள் கழித்து தோற்ற நபரை தனியாக அழைத்து செல்லும் ஒருவர் அவரை முழங்காலிட கூறி தலையில் துப்பாக்கியால் குறிவைப்பது போன்று அந்த வீடியோ முடிவு பெறுகிறது. ஆனால் வீடியோவில் காட்டப்படும் நபர் சுட்டு கொல்லப் பட்டு விட்டதாக தகவல் வெளியாகி யுள்ளது. இது தொடர்பாக காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



## மறுப்பு தெரிவித்தது பக்கிங்ஹாம் அரண்மனை

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கு மகாராணி ஆதரவளிப்பதாக த சன் பத்திரிகை செய்தி தொடர்பிலேயே சர்வஜன வாக்கெடுப்பில் மகாராணி இரண்டாம் எலிசபெத் நடுநிலையான நிலைப்பாட்டில் உள்ளதாக மறுப்பை பெக்கிங்ஹேம் அரண்மனை வெளியிட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆதரவான முன்னாள் பிரதிப் பிரதமர் நிக் க்ளேக்கிற்கும் மகாராணிக்கும் இடையில் சச்சரவு காணப்பட்டதாக பெயர் குறிப்பிட விரும்பதாக அதிகாரியொருவரை மேற்கோள்காட்டி த சன் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் தவறான திசையை நோக்கிச் செல்வதாக நிக் க்ளேக்கிடம் மகாராணி கூறியதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது. அதேவேளை, இவ்வாறான செய்திகள் முட்டாள்தனமானவை என நிக் க்ளேக் கூறியுள்ளார்.



## கொரியாக்களுக்கிடையே மோதல்

கொரியா

குறுந்தூர பலிஸ்டிக் ஏவுகணைகள் இரண்டை கடலுக்குள் வடகொரியா ஏவியுள்ளதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. வடகொரியாவின் கிழக்குக் கரையி-லிருந்தே மேற்படி ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும் அவை 500 கிலோமீற்றர் வரையில் பயணித்து கடலினுள் வீழ்ந்ததாகவும் தென்கொரிய இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஏவுகணைகள் ஏவப்பட்ட சிறிது நேரத்தின் பின், கொரியாக்களுக்கிடையேயான அனைத்து கூட்டுறவு திட்டங்களையும் பயனற்றதாக்குவதாக தெரிவித்த வடகொரியா, வடகொரியாவில் உள்ள தென்கொரியாவின் சொத்துகளையும் அழிக்கப்போவதாக தெரிவித்துள்ளது. வடகொரியாவிலுள்ள தென்கொரியாவின் சொத்துகளில் பெரும்பாலனவை, கேஸொங் கைத்தொழிற்துறை வலயத்திலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்தர குடியேற்றம் குறித்து கனடா அறிவிப்பு

கனடாவிற்குள் இந்த வருடத்திற்குள் 3 இலட்சத்து ஐயாயிரம் பேரை நிரந்தர குடியிருப்பாளர்களாக உள்வாங்க திட்டமிட்டுள்ளதாக லிபரல் அரசாங்கத்தின் குடிவரவு அமைச்சர் ஜோன் மெக்கலம் அறிவித்துள்ளார். கனேடியக் குடியமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான திட்டமிடலில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அகதிகளை குடியமர்த்துதல், குடும்பத்தினரை மீண்டும் ஒன்றிணைத்தல் என்ற அடிப்படையில் இந்த புதிய குடியிருப்பாளர்கள் கனடாவினுள் உள்வாங்கப்படுவார்கள் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு

➡ வித்தியா சாகரன்




வரலாற்றில் எல்லா சம்பவங்களும் மீண்டும் மீண்டும் இடம்பெறவே செய்கின்றன. ஏதோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு வடிவில் ஏதோ ஒரு காலத்தில் அவை நடந்தேறுகின்றன. உலக வரலாற்றின் வழி நாம் பார்த்துக் கொண்டு போக இவை நன்கு தெளிவாகும். அதற்குள் வியட்நாமும் உள்ளடங்குகிறது. போர்க்குணம் அல்லது எதிர்த்து நிற்கும் வல்லமை இந்த உலகில் பிறக்கின்ற அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. அதிலும் மனிதனுக்குள் போரியல் என்பது அறிவுசார்ந்து காணப்படுகிறது. எல்லா மனிதர்களுக்குள்ளும் போர்க்குணம் புதைந்து இருக்கிறது. இந்த குணம் தேவைப்படும் பொழுது வெளிக்காட்டப் படவேண்டும். வெளிக்காட்டினால்தான் இந்த உலகில் வாழலாம், அல்லது உயிரோடு இருக்கலாம். ஏனென்றால் நாமும் ஒரு விலங்குதான் இந்த சுந்தர பூமியிலே.

தமிழனுக்கு இந்த எதிர்க்கும் அல்லது போர்செய்யும் குணம் இருக்கா? இருந்ததா? இருக்குமா? என்று நான் இப்பொழுது ஆராயவில்லை.

ஆனால், வியட்நாமியர்களுக்கு தாராளமாகவே இருந்தது. கருவில் தொடங்கி முதுமனிதன் வரையான வியட்நாமியர்-களுக்கு வயது, பால், மொழி, சமயம், பிரதேசம் இப்படி எந்த பாகுபாடுகளும் இன்றி அவர்களுக்கு தாராளமாகவே இருந்தது.

அவர்களுடைய வரலாற்றில் வியட்நாமியர்கள் எப்படி போர் செய்தார்கள்? என்று இப்படி ஒரு ஆவணம் சொல்கிறது. தோட்டத்தில் விவசாயம் செய்பவன் எந்தநேரமும் முதுகிலே துப்பாக்கியுடன்தான் விவசாயம் செய்தான். வீட்டிலே பிள்ளைகளுடன் இருப்பவள் கூட துப்பாக்கியுடன்தான் இருப்பாளாம். இருக்கின்ற குழந்தை என்ன சிந்திக்கும்? அதுவும் மரத்தால் ஒரு துப்பாக்கியை தனக்காக செய்து கொள்ளும், விளையாடுவதற்காக.

சரி. இந்த வியட்நாமியர்கள் மீதான போரை அமேரிக்கா தன் கைகளுக்குள் எடுத்த 1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து எப்படி அது போரை கட்டவிழ்த்து விட்டது என்பதைப் பார்ப்போம்.

பொதுவாக அமேரிக்கா, வியட்நாம் மீது தொடுத்த போரை "Helicopter War" என்றுதான் சொல்கிறார்கள். வியட்நாம் மீது அமேரிக்கா மட்டும் வீசிய வெடிமருந்தின் மொத்த நிறை சுமார் ஏழு மில்லியன் டொன் கிலோ கிராம் என்று சொல்கிறார்கள். அமேரிக்கா ஒரு போரில், பெரும்பகுதியை Helicopter ஐக் கொண்டு நடத்தியது என்றால் அது வியட்நாமில்தான். அதே நேரம் அமெரிக்காவில் இருந்து தொலைதூரத்தில் இருந்த வியட்நாமுக்கு அனைத்து விநியோகங்களும் தென்சீனக்கடலில் இருந்து விமானதாங்கிக் கப்பல்களில் இருந்தே செய்யப்பட்டது. அதற்கும் Helicopter களே அதிகம் பயன்படுத்தப் பட்டது. வியட்நாமுக்குள் அமேரிக்கா இழந்த வானூர்திகள் மட்டும் 2251 என்று கணக்குகள் சொல்கிறது.

இந்த இடத்தில் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இவ்வளவு வானூர்திகள் இழக்கப்பட்டது என்றால், பயன்படுத்தப் பட்டவை எத்தனை? அவர்களது வானூர்தி தாக்குதலின் வீரியம்? மற்றும் வியட்நாமியர்களின் போர் தந்திரம் அல்லது அவர்களது பலம். ஏனென்றால் தமிழர்கள் எமக்கு வான் தாக்குதல்கள் பற்றியும், அந்த வான்தாக்குதல்கள் தரும் வேதனையும் துன்பமும் பற்றி நன்கு அறிந்தவர்கள்தான். அனுபவப் பட்டவர்கள்தான். வியட்நாமியர்கள் இந்த வானூர்திகளுக்கு எதிராக மேற்கொண்ட ஒரு நடவடிக்கையை வரலாறு இப்படி பதிந்து வைத்திருக்கிறது.

அடர்ந்த காடுகள், இரிசல் பற்றைகள், வெளிகள், வயல்கள், தோட்டங்களுக்குள் வடக்கு வியட்நாமியர்களுக்கு எதிராக போர் செய்த அமெரிக்கர்களுக்கு உதவியாக வந்து இறங்கிய Helicopter ஒன்றை தாக்குதல் நிகழ்த்தாமலேயே அழிக்கப்பட்ட சம்பவம் வியப்பைத்தருவதாகும்.

காத்திருங்கள் ...

# நிகழ்வுகள்

## திருவள்ளுவரின் குருபூசை தினம்

➡ சேனையூர் நிருபர்

ஈரடிகளில் வாழ்க்கையின் தத்துவங்களையும் அனைத்து இரகசியங்களையும் இவ்வுலகிற்கு வழங்கிய திருவள்ளுவர் குரு பூசைதினத்தை முன்னிட்டு அன்புவழிபுரம் அன்பு அறநெறி பாடசாலையினால் நடாத்தப் பட்டது.

அன்று திருவள்ளுவர் குரு பூசை தினத்தை முன்னிட்டு அறநெறி பாடசாலை மாணவர்களின் ஊர்வலம் இடம்பெற்றது.

1330 அதிகாரங்களில் அற்த்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பிரிவுகளுக்குள் அடங்குமாறு திருக்குறளை வடிவமைத்து இவ்வுலகிற்கு சேர்ப்பித்தவர் திருவள்ளுவர் ஆவார்.







## கோணேச பெருமான் வீதி பவனி

➡ சேனையூர் நிருபர்

தெட்சணகைலாயம் எனப் போற்றப்படும் திருகோணமலை மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த நகர்வலம் 08.03.2016 செவ்வாய்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

01ம் நாள் 08.03.2016 அன்று கோணேசப் பெருமான் ஆலயத்தில் இருந்து பிற்பகல் 4.30 மணிக்கு எழுந்தருளி கோட்டை வாசல் வழியாக வீரநகர், திருக்கடலூர் உட்பட பல இடங்களை தரிசித்து அன்புவழிபுரம் தில்லையம்பல பிள்ளையார் ஆலயத்தை சென்றந்து மறுநாள் 09.03.2016 புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு தில்லையம்பல பிள்ளையாா் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு காந்திநகர் பிரதான வீதியூடாக வலது பக்கம் கண்டி வீதி ஊடாக பாலையூற்று, லிங்கநகர் பிரதேசங்களை தரிசித்து உவர்மலை கண்ணகி அம்மன் ஆலயத்தை சென்றடைந்தார்.

தொடர்ந்து 03ம் நாள் 10.03.2016 வியாழக்கிழமை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு உவர்மலை பிரதேசங்களை தரிசித்து விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலயத்தை வந்தடைந்தார். 04ம் நாள் 11.03.2016 வெள்ளிக்கிழமை கோணேசப் பெருமான் புறப்பட்டு திருஞான சம்பந்தர் வீதி வழியாக அப்பிரதேசங்களை தரிசித்து பத்திரகாளி அம்பாள் ஆலயத்தை வந்தடையும். மறுநாள் 12.03..2016 சனிக்கிழமை 05ம் நாள் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து கோணேசப் பெருமான் எழுந்தருளி மனையாவெளி, கல்லூரி வீதி நீதிமன்ற வீதி வழியாக நகர்வலம் வந்து டொக்கியாட் வீதி, வலது பக்கம் பிரட்றிக் கோட்டை வழியாக மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமான் ஆலயத்தை சென்றடைவார்.

பக்தர்கள் பூசைத்தட்டு ஏந்தி சிதறு தேங்காய் உடைத்து தமது நேர்த்திக் கடன்களை செலுத்தி எம்பெருமானை வழிபட்டு வருகின்றனர். மத, மொழி பேதமின்றி அனைவரும் கலந்து வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.





## சிவராத்திரி நிகழ்வு

மகா சிவராத்திரி தினமான (07.03.2016) அன்று திருகோணமலை காந்திநகர் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குரு நிர்மளானந்த சர்மா மற்றும் அன்புவழிபுரம் தில்லையம்பல பிள்ளையார் ஆலய பிரதம குரு மற்றும் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் க.ரவிதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அதிதிகளின் சொற்பொழிவுகளும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## காவிகளும் ஒட்டுண்ணிகளும்!

தேசத்தைப் பற்றவைத்து
குளிர்காய
அவாவி நிற்கும் திரு(ட்ர்)க் கூட்டமொன்று
'தேசப் பற்றாளர்' என்ற
அரிதாரம் பூசியபடி
அரசியல் மேடைகளில்!

'எரிகின்ற வீட்டில்
பிடுங்குவது இலாபம்'
என்பதுவே இவர்களது
வேத மந்திரமாகி.

நகரம் பற்றியெரிய
பிடில் வாசித்து மகிழ்ந்த
மன்னன் நீரோ
இவர்களின் அரசியல் சித்தாந்த
பிதாமகனாக இருப்பானோ . . .
ஆண்டவனுக்கே வெளிச்சம்!

காவிகளுடன் கைகோர்த்து
ஒட்டுண்ணிகளாய்
தேச விருட்சத்தின்
உயிர் சாற்றை உறிஞ்சி உப்பிவிட . . .
குட்டை அரசியலில்
கல்லெறிந்து குழப்பி மீன்பிடிக்க . . .
சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இவர்கள்
தூண்டிலும் கையுமாக
தேச வீதிகளில்!

--ஷெல்லிதாசன்--

## கண்ணீர் வடிப்பாள்

அன்பே நான் ஏங்கி நின்று
தூங்குகின்றேன்
தூங்குகின்ற வேளையிலும்
தூயவளே உனையென்னி
பாங்காக நீ புரிந்த
பணிவிடைகள் நான் மறவேன்
தாங்குகின்ற பூமிமாதா
தனலாய் கண்ணீர் வடிப்பாள்
தீங்கொன்று இல்லையாயின்
தினம் தோறும் தேடி வருவேன்
மூங்கில் மரக் காட்டினிலே
முழு நிலவாய் நீ வந்தால்
ரீங்காரம் பாடிடுவோம்
லீலைகள் நாம் புரிந்திடுவோம்.

சீ.என்துரைராஜா
திருகோணமலை



## நந்தமிழ்

வாசினைப் பாடம் - அதை நீ
வாசிக்க வேண்டும்!
யோசிக்க வைக்கும் - நன்று நீ
யோசிக்க வேண்டும்!

ஒவ்வோர் சொல்லையும் - நன்றாய்
உச்சரிப்பாய் நீ!
அவ்வாறிருந்தால் - உனது
அழகு தமிழ் தான்!

வாசிப்பார்களே – அவையின்
வடிவுப் பேச்சாளர்!
நேசிப்போர் ்களே – தமிழன்
நேயப பா வாணர்!

நாப்பழக்கமாம் - நமது
நல்ல செந்தமிழ்!
பாப் புனையவும் - செய்யும்
பழைய நந்தமிழ்!

-- தாமரைத்தீவான் --
[ஈச்சந்தீவு, கிண்ணியா]




வடக்கின் வசந்தமாம்
கிழக்கின் உதயமாம்
மலையகத்தில் என்னவாம்!

வடக்கின் வசந்தம்
அடக்கு முறைக்குள்
கிழக்கின் உதயம்
இழக்கப்பட்ட
இயல்பு வாழ்க்கை நிலைக்குள்
கலையம்சம் கொண்ட
மலையகத்தில்
மலையக மக்களின்
வாழ்க்கை நிலையோ
கவலைக்குள்!

மாவுக்கு பாணுக்கு
பருப்புக்கு சீனிக்கு
நெருப்பு விலை
மண்ணெண்ணெய் விலையே
விண் கூவும் விலை
அன்னக்காவடி எடுக்கும்
அப்பாவி மக்களுக்கு
நன்மைகள் இல்லையே
மகிழ்ச்சி பெற!

நிச்சயம்
வாழ்க்கைச்சுமையின்
வக்கிரப் பிடிக்குள்
வறுமைப்பட்ட
மக்கள் இன்று!

அழுங்குப் பிடிக்குள்
அகப்பட்ட
தேசியப் பிரச்சினை
எழும்ப முடியாமல்
அழுது கிடக்கு!

வாரம் மாதம் ஆண்டென
வருடங்கள் எத்தனை
வந்து போனாலும்
சோரம் போகும்
தமிழர்கள் அரசியலில்
அச்சாபோடும் வரை
கச்சிதமான தீர்வு
கடைசி வரை
நிச்சயம் கிடைக்காது
தமிழ் மக்களுக்கு!

உச்சம் தொடவும் நாவிலிருந்து
சேனையூர் அ.அச்சுதன்

## கட்டுண்ட நான்

உனதழகின் - பாற்
கட்டுண்டேன் . . .
சுவாசத்தின் மீதமர்ந்து
பல்லாயிரம் தடவைகள்
நீ – உள்ளே
வருகின்றாய் . . .

சதைப்பிடிப்பல்லா
எலும்பின் மீது
போர்த்திக் கிடக்கும்
தோளின் - நிறம்
என்னவோ
கறுப்புத்தான்

சுருக்கங்கள்
ஆங்காங்கே

நளினம் எதுவுமின்றிச்
சுழலும் விழிகள் . . .

சிரித்தால் எங்கும்
குழி விழாது – ஆனால்

- சீரற்ற பல்வரிசை – நிறம்
செம் மஞ்சள்

அருகிற் தாண்டும்
சில நாட்களில்
உதட்டில் உப்புக்
கசிக்கும் - வேர்வை
நெடி . . .

ஆயின்
எதுவுமே ஈர்ப்பில்லா
உன் அழகிற்
கட்டுண்டு கிடத்தற்
சாத்தியமோ?

சாத்தியமே . . .

வெளித் தெரியா
உன் ஆன்மா
எனக்காய்
எவற்றையும்
செய்யச்
சித்தம் கொண்டிருக்கும்..

நான் மூச்சிற் சுமப்பதைப்

போல் - நீயோ
என் பெயரை
ஆன்மாவிற்
சுமக்கின்றாய்.

வியர்வை நாற்றம்
எறியும் - உடலை
காமவேள்விக்
காகுதியாக்கி
மீண்டும் - வியர்வை
யூறிக் கிடக்கும்
உன் . . .

அழகிற் கட்டுண்டாமற்
கிடப்பதெப்படி?

(மாயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பு மாற்றங்கள்

## சில ஊகங்களும், சில கேள்விகளும்

**தெ**ன்னிலங்கையில் அரசசார் பற்ற நிறுவனங்களில் அதிகம் வேலை செய்யும் ஒரு சிங்கள நண்பர் சொன்னார் சிங்கள மக்களில் கணிசமான தொகையினர் இப்பொழுதும் ராஜபக்சவை வெற்றி வீரனாகவே பார்க்கிறார்கள். இப்போதுள்ள அரசாங்கம் அவர் மீது மோசடிக் குற்றச் சாட்டுக்களையும், ஏனைய குற்றச்சாட்டுக் களையும் சுமத்தினாலும் கூட சிங்கள பௌத்த மேலாதிக்கம் என்று வரும்போது ராஜபக்சவே மதிப்புடன் பார்க்கப்படுகிறார்.

அவர் பொதுச்சொத்தைத் தனிச் சொத்தாக்கியது, அதிகாரத்தை தனது குடும்பத்தவர்கள் மற்றும் உறவினர் கைகளுக்குள்ளேயே வைத்துக்கொண்டது போன்ற குற்றச்சாட்டுக்களை சிங்கள மக்களில் குறிப்பிடத்தக்க அளவினர் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் அதேசமயம் அவருடைய ஆட்சிக்காலத்தில் அவரோடிருந்து அவரைப் போல மோசடிகளில் ஈடுபட்ட பலரும் இப்பொழுது புதிய அரசாங்கத்தில் பிரதானிகளாகக் காணப்படுகிறார்கள் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டு-கிறார்கள். ராஜபக்ச குடும்பத்தித்தின் மீதான எல்லாவிதமான குற்றச்சாட்டு-களுக்கும் அப்பால் சிங்கள பௌத்த மேலாதிக்கம் என்று வரும்போது அதற்குத் தலைமைதாங்கக் கூடியவர்களாக ராஜபக்சக்களே பார்க்கப்படுகிறார்கள் என்று.

**அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பில் தீர்மானகரமான ஒரு சந்தியை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் றிஸ்க் எடுப்பதற்கு தமிழ்த் தலைவர்களும் சிவில் இயக்கங்களும் தயாரா????**

கடந்த ஓராண்டு காலமாக ராஜபக்ச குடும்பத்தைப் போர்க்குற்றம் தவிர மற்றெல்லாக் குற்றச்சாட்டுக்களின் மூலமாக ரணில்-மைத்திரி அரசாங்கம் சுற்றிவளைத்து வருகிறது. ராஜபக்சக்கள் ஓரளவுக்குத் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள். யோஷிதவின் கைது ஓர் ஒத்திகைதான். அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்று அரசாங்கம் நாடி பிடித்துப் பார்க்கிறது.

ரோகிதவின் கைதுக்குப் பெரியளவு எதிர்ப்புக்கள் காட்டப்படாத ஓர் பின்னணியில் இனிப் படிப்படியாக ஏனைய ராஜபக்சக்களிலும் கைவைக்கப்படலாம். ரவிராஜ் கொலை வழக்கில் கோத்தபாய-வை நோக்கிக் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படுகின்றன. ரோகிதவைத் தொடர்ந்து தமது ஏனைய குடும்ப உறுப்பினர்களும் கைதுசெய்யப்படலாம் என்ற அச்சம் மகிந்தவுக்கு வந்துவிட்டது. அதை அவர் வெளிப்படையாகச் சொல்வது என்பது ஒருவித தற்காப்பு உத்திதான்.

இவ்விதம் ராஜபக்சக்களைக் குறிப்பிடத்தக்க அளவுக்குத் தற்காப்பு நிலைக்கு தள்ளியிருந்தாலும் கூட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மீதான மகிந்தவின் பிடி முற்றாகத் தளரவில்லை. கடந்த ஓராண்டு காலமாக கட்சியைத் தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் முயற்சியில் மைத்திரிபால சிறிசேன எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. கட்சி இப்பொழுதும் மைத்திரிக்கும் ராஜபக்சவுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு கிழிபடும் ஒரு நிலையே காணப்படுகிறது.

இது காரணமாகவே அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பில் உறுதியானதும், இறுதியானதுமான முடிவுகளை எடுக்க முடியாதிருப்பதான ஒரு தோற்றம் தென்னிலங்கையில் காணப்படுகிறது. நாடாளுமன்றத்தை அரசியலமைப்புப் பேரவையாக மாற்று-வதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்று மாதங்கள் ஆகின்றன.

ஜனவரி 9ஆந் திகதி அந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அதன் மீதான வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்-பட்டுக்கொண்டே வருகிறது. பிரேரணையின் நோக்கத்தைச் சுருக்கமாகக் கூறும் முகப்புரையை (preample) மாற்றுமாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் கோரி வருகின்றனர். பிரேரணையின் முகப்புரையில் முக்கியமாக மூன்று விடயங்கள் அடக்கப்பட்டுள்ளன.

- **நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை மாற்றுவது.**
- **தேர்தல் முறைமையை மாற்றுவது.**
- **இனப்பிரச்சினைக்குத் தீர்வு** காண்பது என்பவையே அவையாகும்.

அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் இம்முகப்புரையை மாற்றுமாறோ அல்லது நீக்குமாறோ கேட்பதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கமும் அதற்கு உடன்பட-விருப்பதாக ஒரு தகவல் உண்டு. அவ்வாறு முகப்புரையை மாற்றினாலோ அல்லது நீக்கினாலோ அரசியலமைப்பு மாற்றம் எவ்வாறு அமையும்? இது தொடர்பில் பின்வரும் கேள்வகள் முக்கியமானவை.

அது அரசியலமைப்புத் திருத்தமாக அமையுமா? அல்லது அது புதிய அரசியலமைப்பு உருவாக்கமாக அமையுமா? இனப்பிரச்சினைக்கான தீர்வு எப்படி அமையும்? அது புதிய அரசியலமைப்பின் உள்ளுடலுக்குள் இணைக்கப்படுமா? அல்லது திருத்தங்களுக்குள் சேர்க்கப்படுமா? இக்கேள்விகளுக்கு இப்போதைக்குப் பதில்களைக் கூறமுடியாது. ஆனால் இவ்வாறான கேள்விகள் எழுப்பப்படும் அளவிற்கு நிலைமைகள் காணப்படுவதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பான இறுதியான உறுதியான முடிவுகளை எடுப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தான் தடையாக உள்ளார்களா? ஐக்கிய தேசியக் கட்சி இதில் விசுவாசமாக உள்ளதா? அல்லது ஐக்கிய தேசியக் கட்சியானது தான் விரும்பாத ஒன்றிற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மீது பழியைப் போட்டுவிட்டு தப்பிக் கொள்ளப் பார்க்கிறதா? இவ்வாறான குழப்பமான ஆனால் தீர்மானகரமான ஓர் அரசியல் சூழலில் தமிழ்மக்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

கூட்டமைப்பு இதுவரையிலும் தனது முன்மொழிவை வெளிப்படுத்தவில்லை. அதேசமயம் தமிழ் மக்கள் பேரவை ஒரு முன்மொழிவை வெளியிட்டிருக்கிறது. கூட்டமைப்பு இனி வைக்கக் கூடிய முன்மொழிவு அல்லது அரசாங்கம் வைக்கக் கூடிய முன்மொழிவு போன்ற எதையும் இனிப் பேரவையின் முன்மொழிவோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய ஒரு நிலைமை இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தோன்றியிருக்கிறது.

முன்மொழிவுகளுக்கு இடையில் கணப்படும் வேறுபாடுகளுக்கு கூட்டமைப்பு விளக்கம் தரவேண்டி இருக்கும். அதேசமயம் அரசாங்கம் வைக்கக்கூடிய ஒரு தீர்வை கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளுமாக இருந்தால் அதற்கும் உரிய விளக்கத்தை அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கும்.

சில சமயம் அரசாங்கம் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதற்கான மக்கள் ஆணையைப் பெறுவதற்கான ஒரு வெகுசன வாக்கெடுப்பை நடத்தப்போகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது கூட்டமைப்பு என்ன செய்யும்? பேரவை என்ன செய்யும்? இனப்பிரச்சினைக்கான தீர்வு அப்புதிய அரசியலமைப்பில் இணைக்கப்பட-வில்லை என்றால் கூட்டமைப்பு என்ன செய்யும்? பேரவை என்ன செய்யும்?

அல்லது அப்புதிய அரசியலமைப்பில் இணைக்கப்பட்டிருக்கும் தீர்வானது திருப்தியாக இல்லையென்றால் கூட்டமைப்பு என்ன செய்யும்? பேரவை என்ன செய்யும்?

சில சமயம் கூட்டமைப்பானது அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளோடு தந்திரோபாயமான ஓர் உடன்பாட்டைக் காட்டு மிடத்து வாக்கெடுப்பின் போது அவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன சொல்லப் போகிறார்கள்? கூட்டமைப்பு அப்படியொரு முடிவை எடுத்தால் பேரவை அப்பொழுது என்ன செய்யும்?

இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வை அரசாங்கம் முன்வைத்தால் அல்லது இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் அரசியலமைப்பு மாற்றங்களை அரசாங்கம் செய்யுமாக இருந்தால் அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளில் தங்கியிருக்கவேண்டிய தேவை இருக்காது.

தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வை முன்வைத்தால் அல்லது அதற்கேற்றாற் போல அரசியலமைப்பை மாற்றினால் அதை மகிந்த அணி கடுமையாக எதிர்க்கும். அப்பொழுது தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றே வெற்றியை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும். ஏறக்குறைய கடந்த ஆண்டு மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெறச் செய்தது போல.

**எனவே இப்பொழுதுள்ள கேள்விகள் வருமாறு:**

**முதலாவது** -அரசியலமைப்பு மாற்றமா? அல்லது திருத்தமா?

**இரண்டாவது** -அதில் இனப்பிரச்சினை-க்கான தீர்வு உள்ளடக்கப்படுமா?

**மூன்றாவது** -ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமா?

**நாலாவது** -அப்படியொரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதில் தமிழ்மக்களின் வாக்குகளில் தங்கியிருப்பதை அரசாங்கம் விரும்புமா? அல்லது முழுக்க முழுக்க சிங்கள மக்களின் வாக்குகளில் தங்கியிருப்பதான ஒரு முடிவை எடுக்குமா?

**ஐந்தாவது** - அப்பொழுது கூட்டமைப்பு என்ன செய்யும்?

**ஆறாவது** -இது விடயத்தில் ஏற்கனவே ஒரு முன்மொழிவை வைத்து அதை மாவட்டங்கள் தோறும் பிரசித்தப்படுத்திவரும் பேரவையானது அப்பொழுது எத்தகைய முடிவை எடுக்கும்?

இவை யாவும் தமிழ்மக்கள் முன்னே தொங்கிக்கொண்டிருக்கும் கேள்விகள். இவற்றில் பெரும்பாலானவை இப்போதுள்ள குழப்பமான நிலைமைகளை அடிப்படையாக வைத்து ஊகிக்கப்படும் கேள்விகள்.

எனவே, ஊக அடிப்படையில் இவற்றுக்குப் பதில் கூறுவதை இக்கட்டுரை தவிர்க்கிறது. ஆனால் தமிழ்மக்களின் அடுத்தகட்ட அரசியல் தொடர்பில் இக்கேள்விகளுக்கான விடைகள் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தவை. தமிழ்மக்கள் எந்த வழியால் போகவேண்டும் என்பதை தீர்மானிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. தமிழ்த்தலைவர்களும் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் தீர்மான-கரமான முடிவுகளை எடுக்கவேண்டிய ஒரு காலம் வருகிறது.

முடிவுகளை எடுத்தால் மட்டும் போதாது. தீர்மானங்களை நிறைவேற்றினால் மட்டும் போதாது. அவற்றை செயலுக்குக் கொண்டுபோக வேண்டும். அவ்வாறு செயலுக்குக் கொண்டுபோகுமிடத்து அதில் வரக்கூடிய இழப்புக்களுக்கும், ஆபத்துக்க-ளுக்கும் தயாராக இருக்க வேண்டும். அதாவது றிஸ்க் எடுக்க வேண்டும்.

இந்த இடத்தில் அண்மையில் இயற்கை எய்திய அரங்கச் செயற்பாட்டாளர் அரசையாவுடனான ஓர் உரையாடலை நினைவுகூர வேண்டும். 1990ஆம் ஆண்டளவில் இக்கட்டுரை ஆசிரியர், அரசையாவோடு உரையாடும்போது சத்தியாக்கிரகம் பற்றி சில கேள்விகளைக் கேட்டார்.

அச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மிகவும் பிரசித்தமாகிய ஓர் ஒளிப்படம் உண்டு. ஒரு சத்தியாக்கிரகி நிலத்தில் மல்லாக்கக் கிடந்தபடி அசைய மறுக்கிறார். காற்சட்டை அணிந்த ஒரு காவல்துறையினர் அந்த சத்தியாக்கிரகியின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியின் கத்தி முனையை நீட்டிக் கொண்டு நிற்கிறார்.

சத்தியாக்கிரகம் தொடர்பில் வெளிவந்த ஒளிப்படங்களில் அதிகம் கவனிப்பைப் பெற்ற மேற்படி காட்சியில் நிலத்தில் கிடக்கும் - சத்தியாக்கிரகி அரசையா தான். இது தொடர்பில் அவரோடு உரையாடிக்கொண்டிருந்த போது இக்கட்டுரை-யாசிரியர் அவரிடம் ஒரு கேள்வி கேட்டார். "எமது அகிம்சைப் போராளிகள் அகிம்சையை ஓர் உத்தியாகத்தான் கையாண்டார்கள். அதை அவர்கள் ஒரு வாழ்க்கை முறையாகக் கடைப்பிடிக்க வில்லை. அன்றைக்கு அகிம்சை எனப்படுவது சாகத் துணிந்தவர்களின் போராட்டமாக இருக்கவிலலை. சாகப் பயந்தவர்களின் போராட்டமாகவே காணப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டுத் தமிழ்த் தரப்பில் உள்ளது. இது தொடர்பில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று.


அதற்கு அரசையா சிரித்துக் கொண்டு சொன்னார் "இப்பொழுது சாகத்தயாராக தமது இலக்கை நோக்கிச் செல்லும் பிள்ளைகளைப் போல ஒரு ஐநூறு பேராவது அப்பொழுது எங்கள் மத்தியில் இருந்திருந்தால் முடிவுகள் வேறு விதமாக அமைந்திருக்கும்" என்று.

அதாவது அகிம்சைப் போராட்-த்தின் போது தமது இலக்குகளை அடைவதற்காக அர்ப்பணிப்புக்கும், தியாகத்திற்கும் தயாராக இருந்தால் தான் வெற்றி பெற முடியும். என்ற அர்த்தத்திலேயே அரசையா அவ்வாறு கூறினார்.

இதை இக்கட்டுரை ஆசிரியர் இதற்கு முன்னரும் சில தடவைகள் வேறு சில கட்டுரைகளில் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

அரசையா கூறியது போல றிஸ்க் எடுக்க தமிழ்த் தலைவர்களும், கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் தயாரா? அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பில் தீர்மானகரமான ஒரு சந்தியை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் அரசையா கூறியது போல றிஸ்க் எடுப்பதற்கு தமிழ்த் தலைவர்களும், சிவில் இயக்கங்களும் தயாரா?








நிலாந்தன்
www.tamilkingdom.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 95

# முகநூலின் மறுபக்கங்கள்



(வி.என்.சந்திரகாந்தி)

சில வாரங்கள் முன்னர் 'முகநூல்' என்னும் சமூக வலைத்தளம்' என்கின்ற கட்டுரை என்னால் எழுதப்பட்டு இப்பகுதியில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அக்கட்டுரையில் முகநூலின் பயன்பாடு பற்றியே அதிகம் எழுதப்பட்டிருந்தது. 2004ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட முகநூல், அண்மையில் தனது பன்னிரண்டாவது பிறந்த தினத்தையும் கொண்டாடியது.

இருந்தும் என்ன... இன்னும் பலர் முகநூல் பற்றி அச்சம் கொண்டவர் களாக இருப்பதையே காணக்கூடியதாக உள்ளது. எனது நெருங்கிய உறவினள் ஒருத்தி வெளிநாட்டில் நீண்ட காலமாக வசிக்கின்றாள். எனது முகநூல் பக்கங்களை பார்க்கும்படி அவளை பலவாறு வேண்டியும் அவள் முகநூலில் அறிமுகமாகாத நிலையில் எனது பகிர்வுகளை பார்ப்பதில்லை. "முகநூல் ஒரு சந்தை. அங்கு சண்டையும் சச்சரவும்தான் இருக்கும். நீங்கள் அதற்குள் சென்று அகப்பட்டு கொள்ள வேண்டாம்." என்று அவளது பிள்ளைகள் அவளை எச்சரித்திருப்பதாக கூறுவாள்.!

அதே போன்று எனது நண்பர் ஒருவரின் பையன் வெளிநாட்டில் "software Engineer" கல்வியை முடித்து பெரிய "IT" நிறுவனத்தில் பணிபுரிகின்றான். அமெரிக்காவில் உள்ள முகநூல் சார்ந்த நிறுவனம் ஒன்று அவனை பணிக்கமர்த்துவதற்காக அதிக சம்பளம் தர முன்வந்த நிலையிலும் அவன் மறுத்துவிட்டான். அத்தனைக்கும் அவனுக்கு முகநூல் கணக்கு ஒன்று இல்லை.

என்னதான் பிரச்சனை என்று ஆராய்வதற்காக முகநூலில் அதிக ஆர்வம் உள்ள எனது நணபர் ஒருவருக்கு கதையை கொடுத்துப் பார்த்தேன். அவர் தனது அண்மைக்கால அனுபவம் ஒன்றை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

சில நாட்கள் முன்னர் அவர் குடும்ப சமேதரராக தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளார். அங்கு நூறு வயதை அண்மித்த உறவினர் ஒருவரை அவரது சகோதரி பராமரித்து வந்த நிலையில் அவளை பாராட்டியதுடன் புகைப்படங்களையும் சிறு விமர்சனங்களையும் தனது முகநூலில் பதிவுசெய்துள்ளார். "எனது பாட்டனாரின் வேண்டுகோளில் நாங்கள் எங்கள் சொந்த ஊருக்கு சென்றோம். நூறு வயதிலும் அவருக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் எதுவும் இல்லை. தனது கடமைகளை தானே செய்பவராகவும் உள்ளார்". அதுதான் நண்பர் செய்த பதிவு. சகோதரிக்கு அண்மையில் தான் யாரோ அவள் பெயரில் முகநூல் கணக்கொன்றை ஆரம்பித்து கொடுத்திருந்தார்கள்.

எனவே வந்தது வினை.... நண்பருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திக் கொண்டு மனத் தாங்கல் ஏற்படும் படி நல்ல கிழி! "பாட்டாவுக்கு வருத்தம் இல்லை என்று யார் சொன்னது. நேற்றும் நான் டாக்டரிடம் அவரை அழைத்து சென்றேன். உடுப்பு தோய்ப்பது முதற்கொண்டு அவரது கடமைகளை நான்தான் செய்கிறேன். பாட்டாவின் அழைப்பில்தான் வந்தீர்களா? நான் உங்களை அழைக்கவில்லையா?"

நண்பர் அதிர்ந்து விட்டார். மேசை நாகரீகம் போன்று முகநூல் நாகரீகம் என்றும் ஒன்று இருப்பதை ஏற்று நண்பர் பகிர்வை செய்திருந்தார். சகோதரி அதை புரிந்து கொள்ளவில்லை. நண்பர், உடனேயே அவள், தனது முகநூலை பார்க்கமுடியாத படி தடை செய்து விட்டார்.

சரி... விடயத்திற்கு வருவோம். என்னதான் முகநூலில் அரிய பயன்கள் இருந்தாலும் கூட பாதகமான விடயங்களும் குறிப்பிடப்படும் அளவுக்கு இருப்பதை மறுக்க முடியாது.


பிரதானமாக எவரும் பிறரது பெயரில் முகநூல் கணக்கொன்றை ஆரம்பித்து இயக்க முடியும். இப்போதெல்லாம் கைப்பேசியிலேயே முகநூலை பார்வையிட முடியும். பிறர் பற்றி போலியான, பிழையான அபகீர்த்தி ஏற்படக்கூடிய தகவல்களையும், படங்களையும் உலவவிட முடியும். இந்தியாவில் பிரசித்தி பெற்ற நடிகைகளின் போலியான ஆபாசப் படங்கள் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகின்றன. இப்படியான படங்களை இளைய சமுதாயம் மற்றும் மாணவர்கள் தமக்குள் பரிமாறிக்கொள்கின்றார்கள். அதனால் இளம் சமுதாயத்தின் கல்வியும் கலாச்சாரமும் மிக மோசமாக பாதிப்புக்கு உள்ளாகின்றன.

முகநூல் அதிக அளவு விமர்சனத்துக்குள்ளாவது காதல் விவகாரம் காரணமாகவே! பெற்றோர் தமது பெண்பிள்ளைகளை பொத்தி வளர்க்கின்றார்கள் என்றால் முகநூலோ அவர்களை சந்தைக்கு கொண்டு வந்து விடுகின்றது! ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காமலும் சரியான தகவல்களை பெற்றுக்கொள்ளாமலும் காதல் செய்ய முடிவெடுக்கும் பெண்கள் பற்றி என்னதான் கூறமுடியும்!

காதல் செய்யும் பெண்கள் படுக்கையறை ஆடைகளுடன் தமது படங்களை காதலருக்கு அனுப்பி வைக்கின்றார்கள். காதலன் தன்னுடன் நெருங்கியிருக்கும் வீடியோக்களை, பெண்கள் அன்பு நிமித்தம் ஏற்றுக் கொள்கின்றார்கள். காதல் முறிவடையும் போது பெண் முகநூலில் பழிவாங்கப்படுகிறாள்.

எமது தகவல்களை பிறர் திருட முகநூல் இடம கொடுக்கிறது. நாம் முகநூலில் பகிரும் எமது படங்களை திரிபு படுத்தி மற்றவர்களுக்கு 'Tag' பண்ண வாய்ப்பிருக்கின்றது.

சிறுவர்கள் சரியான மனப்பக்குவமின்மை காரணமாக ஆபாசம் சார்ந்த படங்களுக்கும் வீடியோக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். திகலூட்டும் செய்திகளையும் ஆபாச வீடியோக்களையும் 'கிளிக்' செய்வது பல சந்தர்ப்பங்களில் விபரீதத்தை உண்டு பண்ணிவிடும். பாவனையாளரே அச் செய்திகளையும் ஆபாச வீடியோக்களையும் இற்றைப் படுத்தியதாக காட்டிவிடும். முகநூல் மூலம் பல காரணங்களுக்காக சிறுவர்கள் குற்றவாளி களாகிறார்கள்.




மாணவர்களதும் தொழில் புரிபவர்களதும் முன்னேற்றத்திற்கு முகநூல் பெரும் தடையாக உள்ளது. மாணவர்கள் படிப்பில் செலவிட வேண்டிய தமது பொன்னான நேரத்தை முகநூலில் செலவிடுகின்றார்கள். அதே போன்று தொழில் புரிபவர்கள் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் முகநூல் பார்ப்பதால் அவர்களது வினைத்திறமையான சேவை வீழ்ச்சியடைகின்றது.

பாவனையாளர்கள் எவராக இருந்தாலும் தாம் முகநூலில் நேரத்தை அதிக அளவில் செலவிடுவதை உணர்ந்து கொள்வதில்லை. கல்வி கற்போர் தமது முகநூல் கணக்கை ஒழுங்காக பார்க்க முடியாத போது அசௌகரியமடைகிறார்கள். முகநூலில் முழுநேர ஈடுபாடு ஒரு பழக்கதோஷமாக உருவாகிவிடுகிறது. அதுவே ஈற்றில் சமூக விரோத செயல்களுக்கு காரணமாகிவிடுகின்றது.

பாவனையாளர்கள் புதிய புதிய படங்கள் மற்றும் வீடியோகிளிப்சை இற்றைப்படுத்துவதுடன் அவற்றை பிறருடன் தொடர்ந்து பகிரும்போது அதற்கு அடிமைப்படுவதுடன் அவற்றிற்கு தடை உண்டாகும் போது விரக்திக்கும் உள்ளாகின்றார்கள். பலர் அநாவசியமானதும் தம்முடன் சம்பந்தமில்லாததுமான விடயங்களை பகிர்வதால் நண்பர்கள் அதிருப்திக்கு உள்ளாகின்றார்கள். முகநூலில் அதிக ஈடுபாடு திருட்டுக்கு சந்தர்ப்பத்தை உண்டு பண்ணுகின்றது. பிற ஆற்றல்களுக்கு தடையாக அமைகின்றது.

முகநூல், கைவிட்டு போன பழைய உறவுகளை மீட்க உதவுகின்ற போதும் வயோதிபம், சுகயீனம், ஆர்வமின்மை காரணமாக அக் கணக்குகளை அவர்களது பிள்ளைகளே இயக்கும் நிலை உள்ளது. அதனால் உண்மையான நினைவுகள் மீட்கப்படுவதில்லை. அதே சமயம் புதிய உறவுகளின் நிர்ப்பந்தங்கள் உண்டாகின்றன.

முகநூல் பாவனையாளர்கள் தாம் சார்ந்து நிற்கும் கட்சி, கொள்கைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ள ஆர்வமாயிருப்பர். அவை அனைவருக்கும் ஏற்புடையதாக அமையமாட்டாது. இந் நிலையில் முகநூலில் எதிர்வாதங்கள் கிளம்ப இடமுண்டு பலரது குற்றச்செயல்கள் அம்பலத்துக்கு வருகின்றது. அண்மைக் காலத்தில் முகநூலில் எமது அரசியல் களம், ஆயுத போராட்டம் உட்பட காணமல் போனோர் பற்றிய கட்டுரை களும் விவாதங்களும் சூடுபிடித்திருப்பதை அவதானிக்கலாம்.

எம்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி முகநூல் பல விவாக இரத்துக்களுக்கு காரணமாக அமைந்து விடுகின்றது. கணவன் மனைவி இருபாலாரும் தனித்தனி முகநூல் கணக்குகளை வைத்திருப்பதும் அவர்களது நட்பு வட்டம் வேறுபடுவதும் சாதாரணமாக காணப்படுகின்றது. கணவன், தனது மனைவியின் பிறருடனான தொடர்புகளை அவதானிக்கின்றான். அதே போல் மனைவியும் விழிப்பாக இருக்கின்றாள். பிறருடனான தொடர்புகள் சந்தேகத்திற்கு இடமளிக்கின்றது. அதே போன்று விவாகத்துக்கு முன்னைய உறவுகள் புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். கோபத்தில் சமூகவலைத்தளத்தில் செய்யும் அநாவசிய இற்றைப்படுத்தல்கள் அல்லது விமர்சனங்கள் பகையை உண்டுபண்ணும். முகநூல் இருபாலாருக்குமே புதிய நட்பு வட்டங்களை உண்டு பண்ணி விடுகின்றது. அது குடும்பத்தில் விரிசலை உண்டு பண்ணுவதுடன் புதிய மணவாழ்க்கைக்கும் காலாகிவிடுகின்றது.

இன்னும் சொல்லப்போனால் முகநூலில் சரியான தேடல் பொறி ஒன்று இல்லை. அறிவையும் ஆற்றலையும் [illegible] உள்ளது!

# விநோதங்கள்

## முதியவரின் வாரிசாகிய பென்குயின்

பிரேசிலில் உள்ள கிராமத்தை சேர்ந்த முதியவரான ஜூவா பெரேரா டி சவுசா என்பவர் அருகில் உள்ள கடலில் மீன் பிடிப்பதை தனது பொழுதுப்போக்காக கொண்டுள்ளார். இந்நிலையில் கடந்த 2011ஆம் ஆண்டு பாறையில் சிக்கி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த பென்குயின் ஒன்றை மீட்டு சிகிச்சை அளித்த ஜூவா அதற்கு டிண்டிம் என பெயரும் இட்டுள்ளார். பின் அந்த பென்குயின் குணமடைந்ததும் கடலில் சென்று விட்டுள்ளார்.

இதையடுத்து அப் பென்குயின் டிண்டிம் ஜூவாவை பார்ப்பதற்காக ஆண்டுக்கு 5000 மைல்கள் பயணம் மேற்கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளாக வந்து செல்வதாக தெரியவருகின்றது.



## ஒரு தாய் இரு தந்தையர் – இரு குழந்தைகள்

வியட்நாமின் ஹனோய் நகரை சேர்ந்த பெண் ஒருவருக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன. தற்போது இரண்டு வயதாகும் இந்த குழந்தைகள் இருவரும் வெவ்வேறு உடல் அமைப்புகளுடன் இருந்துள்ளனர். எனவே சந்தேகம் கொண்ட கணவன், குழந்தைகளுக்கு டிஎன்ஏ பரிசோதனை செய்ய திட்டமிட்டார். அத்துடன் பரிசோதனை செய்து பார்த்ததில் ஒரு குழந்தை அவருக்கு பிறந்தது என்றும், மற்றொரு குழந்தை வேறொரு நபர் மூலம் பிறந்தது உறுதிசெய்யப்பட்டது.

பிரசவத்தின்போது குழந்தைகள் பல்வேறு மணிநேர வித்தியாசத்தில் பிறந்ததும் தெரியவந்தது.



## காரணமே நீங்க தானா???

சீனாவின் லையனோங் பகுதியில் தமது காதலனுடன் பேக்கரி கடை ஒன்றை நடத்தி வந்துள்ளார் காதலி. தொடர்ந்து 8 மாதங்களாக கோமா நிலையில் மருத்துவ மனையிலேயே இருந்து வந்துள்ள இவருக்கு தேவையான அனைத்து பணிவிடைகளையும் காதலரே கவனித்து வந்துள்ளதாகவும் அவரது மருத்துவ செலவிற்காக பணம் செலவு செய்ததாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் 8 மாதங்களுக்கு பின்னர் கோமாவில் இருந்து மீண்டு வந்துள்ள அவர், தமது நிலைக்கு தன் காதலனே காரணம் என காவல்துறையில் புகார் தெரிவித்துள்ளார். தாம் நடத்தி வந்த பேக்கரியில் நாள் எதிர்பாராதாவகையில் சில ரொட்டிகள் இவரது கவனக்குறைவால் தீய்ந்ததாகவும் இதில் ஆத்திரம் அடைந்த காதலன் தன்னை தலையில் மூர்க்கத்தனமாக தாக்கியதாகவும் தெரிவித்துள்ளார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள், 5-வது மாடியில் இருந்து குதித்து விபத்துக் குள்ளானவரின் காயம்போன்று இருந்ததாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## பிச்சைக்காரன்

நடிகர் : விஜய் ஆண்டனி
நடிகை : சாத்னா டைடஸ்
இசை : விஜய் ஆண்டனி
ஒளிப்பதிவு : பிரசன்ன குமார்
இயக்குனர் : சசி

அடுத்த வார இதழில்



## திரை விமர்சனம் "கணிதன்"

நடிகர் : அதர்வா
நடிகை : கேத்ரின் தெரசா
இயக்குனர் : சந்தோஷ்
இசை : டிரம்ஸ் சிவமணி
ஒளிப்பதிவு : அரவிந்த் கிருஷ்ணா

துடிதுடிப்பும், ஆர்வமும் நிறைந்த இளம் சேனல் நிருபரான அதர்வா அதிகம் பிரபலமடையாத சேனல் ஒன்றில் பணியாற்றி வருகிறார். பிபிசி சேனலில் நிருபராக வேண்டு மென்பது அதர்வாவின் தீராத ஆசை. அதற்காக எந்நேரமும் சிந்தித்துக்கொண்டேயிருக்கும் சூழ்நிலையில், போலி சர்டி.ஃ.பிகேட் விவகாரம் ஒன்றில் சிக்கி ஜெயிலில் அடைக்கப்படுகிறார் அதர்வா. இதுபோன்ற போலி சான்றிதழ் விவகாரத்தில், தான் மட்டுமல்ல பல இளைஞர்களும் சிக்கியிருப்பதை உணரும் அதர்வா, இந்த குற்றச்செயலுக்கு பின்னால் இருப்பவர்களை சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்ட எடுக்கும் போராட்டங்களே கணிதன் படத்தின் கதைக்களம்.



படத்தின் முதல் பாதியில் நிருபராகவும் இரண்டாம் பாதியில் ஆக்ஷன் ஹீரோவாகவும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் அதர்வா. தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள இவர் எடுக்கும் முயற்சிகள் ரசிக்கும் படியாக உள்ளது. இதுவரை பக்கத்து வீட்டுப் பெண் போன்ற சாயலில் ரசிகர்களை வசீகரித்த கேத்ரின் தெரசா, இந்தப் படத்தில் கவர்ச்சி அவதாரம் எடுக்கிறார்.

வில்லனாக வரும் தருண் அரோரா பார்வையிலும் உடல் மொழியிலும் மிரட்டுகிறார். நரேன், பாக்யராஜ், கருணாகரன் உள்ளிட்ட பலர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்திருக்கிறார்கள். போலி கல்விச் சான்றிதழ் சமூகத்தில் எந்த அளவுக்கு அதிகமாகப் புழங்குகிறது, அதனால் இளைஞர்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள், திறமையே இல்லாதவர்கள் போலிச் சான்றிதழ்கள் மூலம் வேலை வாய்ப்புகளை எப்படியெல்லாம் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பதைத் துணிந்து சொன்ன இயக்குநர் டி.என். சந்தோஷுக்கு சபாஷ் போடலாம். முருகதாஸின் உதவியாளர் என்பதாலோ என்னவோ, படத்தின் திரைக்கதை அமைப்பும், சிற்சில காட்சிகளும் துப்பாக்கியை அப்படியே ஞாபகத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக இடைவேளை காட்சி, அப்படியே துப்பாக்கி ஸ்டைலில் அமைந்துவிட்டது. டிரம்ஸ் சிவமணியின் இசை படத்திற்கு பெரும் பலம். இவருடைய இசையில் பாடல்கள் அனைத்தும் அருமை. அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும் சிறப்பாக அமைந்திருக்கிறது. வழக்கமான ஆக்ஷன் படமாக மட்டும் இல்லாமல், சமூகத்தின் முக்கியப் பிரச்சினையை ஊடகங்களின் பார்வையில் படமாக்கியிருப்பதன் மூலம் கணிதன் கவனிக்க வைக்கிறான்!

## பாலிவுட் முன்னணி நாயகியின் ஆசை

மணிரத்னம் படம் என்றாலே ரசிகர்களிடம் தனி வரவேற்பு இருக்கும். அதேபோல் அவருடைய இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படும் பிரபலங்கள் பலர். அந்த லிஸ்டில் தற்போது இணைந்துள்ளார் பாலிவுட்டின் பிரபல நாயகி அலியா பட்.அண்மையில் ஒரு விழா ஒன்றில் அலியா பட், எனது அப்பா மகேஷ் பட் தூண்டுதல் காரணமாகவே தென்னிந்திய படங்களை பார்க்க ஆரம்பித்தேன். மணி சாரின் படத்தில் நடிக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. ஒருவேளை நான் தென்னிந்திய சினிமாவில் நடித்தால் கண்டிப்பாக அது மணி சாரின் படமாகத் தான் இருக்கும் என்று அலியா பட் தெரிவித்திருக்கிறார்.


## விஜய்க்காக சம்மதிப்பாரா சூப்பர் ஸ்டார்?





தமிழ் சினிமாவில் இன்று பலரும் விரும்பும் பட்டம் சூப்பர் ஸ்டார் தான். ஆனால், இன்றும் அந்த இடத்தை விட்டுக்கொடுக்காது சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பவர் ரஜினிகாந்த்.இந்நிலையில் இந்த சூப்பர் ஸ்டார் ரேஸில் முன்னணியில் இருக்கும் விஜய் நடித்த தெறி படத்தின் இசை வெளியீட்டு விழா மார்ச் 20 தேதி நடக்கவுள்ளது. இப்படம் மட்டுமின்றி கபாலி படத்தையும் கலைப்புலி தாணு அவர்கள் தான் தயாரித்துள்ளார்.இதனால் தெறி படத்தின் இசை வெளியீட்டு விழாவிற்கு ரஜினியை மரியாதை நிமித்தமாக அழைக்க, அவர் வருவாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## தெறி படத்தில் டிஆர்



தெறி படத்தின் பாடல் வெளியீடு வரும் 20ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் இந்த படத்தில் டி.ராஜேந்தர் ஒரு குத்து பாடலை பாடியுள்ளார். ரொமான்ஸ் கலந்த குத்து பாடலான இந்த பாடலை டி.ராஜேந்தருடன் இணைந்து சோனு கர்கார் என்ற பாடகியும் இணைந்து பாடியுள்ளார். இந்த பாடல் ராக்கம்மா என்ற வார்த்தையுடன் தொடங்குவதாக கூறப்படுகிறது. இசைஞானி இளையராஜா இசையில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த தளபதி படத்தில் இடம்பெற்ற சூப்பர் ஹிட் பாடல் ஒன்றும் இதே ராக்கம்மா என்ற வார்த்தையுடன் தொடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ள இந்த படத்தில் விஜய், சமந்தா, எமிஜாக்சன், ராதிகா, இயக்குனர் மகேந்திரன் உள்பட பலர் நடித்துள்ளனர். அட்லி இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த படத்தை பெரும் பொருட்செலவில் கலைப்புலி எஸ்.தாணு தயாரித்துள்ளார்.

## என்ன ஒரு கொடுமை



விஜய் ஆன்டணி நடிப்பில் வெளியாகி பிச்சைக்காரன் படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அண்மையில் கூட படக்குழுவினர் வெற்றி விழா கொண்டாடினர். இந்நிலையில் அந்தணர் முன்னேற்றக் கழகம் சார்பில் சென்னை போலீஸ் கமிஷ்னரிடம் மனு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.அதில் புனிதமாக மதிக்கும் காயத்ரி மந்திரம் வன்முறை காட்சிகளுக்கு பின்னணி இசையாக பிச்சைக்காரன் படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், கோவில்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்களை, பிச்சைக்காரர்கள் போல இழிவாக பேசும் காட்சிகளும், பிச்சைக்காரன் படத்தில் இடம் பெற்றுள்ளது. அதனால் அந்த படத்தை தடை செய்ய வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

OTHER

MOBILE

## புதிய வடிவமைப்பில் பேஸ்புக் மெசஞ்சர்



பேஸ்புக் சமூக வலைத்தளமானது பல மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கொண்டு தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகின்றது. இந்நிலையில் பயனர்களுக்காக புதிய அம்சங்கள் மற்றும் அப்பிளிக்கேஷன்களை பேஸ்புக் அறிமுகம் செய்துவருகின்றமை அறிந்ததே. சமீபத்தில் கூட லைக் செய்வதற்கு பதிலாக புதிய பட்டன்களை அறிமுகப்படுத்தி இருந்தது. இதன் தொடர்ச்சியாக அன்ரோயிட் சாதனங்களுக்கான மெசஞ்சரின் புதிய பதிப்பினை அறிமுகம் செய்துள்ளது. இதன் பழைய வடிவமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தி Google Material Design எனும் புதிய வடிவமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப் புதிய பதிப்பு கண்கவர் வடிவத்தில் காணப்படுவதுடன், இலகுவாக கையாளக் கூடியதாகவும் இருக்கின்றது. குறித்த வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு கூகுள் பிளே ஸ்டோர் தளத்திற்கு விஜயம் செய்து புதிய பதிப்பினை நிறுவிக்கொள்ள முடியும்.

## சார்ஜ் செய்ய உதவும் LM Cable

ஐபோன் மற்றும் ஆன்ட்ராய்டு கைப்பேசிகளை சார்ஜ் செய்ய உதவும் LM cable அறிமுகமாகியுள்ளது. அதிகமான ஆன்ட்ராடு கைப்பேசி பயன்பாட்டாளர்கள் தொலைதூர பயணத்தின்போது அதனை சார்ஜ் செய்வதற்கு USB cable- யினை பயன்படுத்துவார்கள். ஆனால், இந்த சார்ஜர் ஐபோன் மற்றும் ஐபேட் பயன்பாட்டாளர்களுக்கு பயன்படாது, இந்நிலையில் இரு கைப்பேசியை பயன்பாட்டாளர்களும் பயன்படுத்தும்விதமாக LMcable சார்ஜர் அறிமுகமாகியுள்ளது.

இந்த ஒரு சார்ஜரில் இரு இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன, ஒரு முனையில் ஐபோன் மற்றும் ஐபேட்டினை சார்ஜ் ஏற்றும் வசதியும் மறுமுனையில் Micro-USB பிரிவும் உள்ளன. மேலும் இந்த சார்ஜரானது வேகமாக தரவு பரிமாற்றம் செய்வதற்கும், 2.4A வேகத்திலும் சார்ஜ் ஏறுகிறது.









## சமூகவலைதளம் இல்லாதபோது குழந்தைகள் என்ன செய்தார்கள்?

பேஸ்புக் மற்றும் சமூக வலைதளங்களின் பிடியில் சிக்கித்தவிக்கும் இன்றைய குழந்தைகளை அதிலிருந்து மீட்டெடுப்பது என்பது இயலாத காரியம். அந்த அளவுக்கு, அறிவியல் உலகம் வளர்ந்துவிட்டது, ஆனால் 100 வருடங்களுக்கு முன்னர் இந்த சமூகவலைதளங்கள் ஏதும் இல்லாத சிறுவர்கள் என்ன செய்திருப்பார்கள்? பந்து விளையாடுவது, குளங்களில் நீச்சலடிப்பது, தண்ணீரில் கப்பல் விடுவது, சைக்கிள் ஓட்டுவது என தெருவோர சாலைகளில் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தனர் சுட்டிக்குழந்தைகள்.

ஆனால், இன்றைய குழந்தைகள் பூட்டிய அறைக்குள் அமர்ந்து கொண்டு, சமூகவலைதளம் எனும் கடலுக்குள் தங்களை மூழ்கடித்துவிட்டார்கள்.







## நாட்காட்டி காலண்டர்!



உங்களுடைய அன்றாட பணிகளை நீங்கள் திட்டமிட்ட நேரத்திற்கு முன்கூட்டியே முடிப்பதற்கு ஏற்ற வகையில் காலண்டர் நாட்காட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த காலண்டர் நாட்காட்டி, உங்களுடைய அன்றாட திட்டங்கள் மற்றும் அடுத்து நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதை உணர்த்துவதில் மிக தனிப்பட்ட பாதையினை ஏற்படுத்திக்கொடுக்கிறது. இந்த நாட்காட்டியினை நீங்கள் அணிந்திருந்தால் காலண்டர் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

## 9.7 இன்ச் தொடுதிரையுடன் iPad Pro

அப்பிள் நிறுவனத்தின் புதிய படைப்பா iPad Pro 9.7 இன்ச் தொடுதிரையுடன் வெளியாகவிருக்கிறது. 9.7 இன்ச் தொடுதிரை, 2732 x 2048 pixels, மேலும் 4GB RAM மற்றும் சேமிப்பு வசதியாக 16GB முதல் 128GB உள்ளது. மேலும், இந்த ஐபேட்டில் 12 மெகாபிக்சல் கமெரா வசதி உள்ளது, 4K வீடியோ திறன் வசதி கொண்டது.

## பேஸ்புக் எட்டிய புதிய மைல்கல்

இணைய ஜாம்பவான்களுள் ஒன்றாக திகழும் பேஸ்புக் ஆனது ஆரம்பிக்கப்பட்ட சில வருடங்களில் பல சாதனைகளை தனதாக்கியுள்ளது. இதன் வரிசையில் தற்போது இந்தியாவில் மட்டும் 142 மில்லியன் பயனர்களை எட்டி மற்றுமொரு சாதனையை எட்டியுள்ளது. இதில் நாள்தோறும் 69 மில்லியன் இந்தியர்கள் பேஸ்புக்கினை பயன்படுத்துவதாகவும், அவர்களில் 64 மில்லியன் வரையானவர்கள் தமது மொபைல் சாதனங்களின் ஊடாக பேஸ்புக் தளத்திற்கு விஜயம் செய்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியில் 1.59 பில்லியன் பயனர்களை உலகெங்கிலும் கொண்டிருந்த பேஸ்புக்கின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அதிகூடிய சேமிப்பு வசதி கொண்ட வன்றட்டை

கணினியின் பாவனை அதிகரித்துள்ளதுடன், அவற்றில் சேமிக்கப்படும் கோப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு பல்வேறு நிறுவனங்கள் வன்றட்டின் (Hard Disk) சேமிப்பு கொள்ளளவினை அதிகரித்து அறிமுகம் செய்கின்றன. இவற்றின் வரிசையில் தற்போது சம்சுங் நிறுவனம் 16 ரெறாபைட் (TB) சேமிப்பு வசதி கொண்ட உலகின் முதலாவது வன்றட்டினை அறிமுகம் செய்துள்ளது. இவ் வன்றட்டில் 3 மில்லியன் MP3 பாடல்கள், 4,000 திரைப்படங்கள், 5 மில்லியன் வரையான நிழற்படங்கள் போன்றவற்றினை சேமிக்க முடியும். மேலும் 2.5 அங்குல அளவுடைய இவ் வன்றட்டினை இடத்திற்கு இடம் இலகுவாக எடுத்துச் செல்லக்கூடியதாக இருத்தலும், செக்கனுக்கு 10GB வேகத்தில் தரவுப் பரிமாற்றம் செய்யக்கூடியதாக இருத்தலும சிறப்பம்சங்களாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரணமானவனின் மனது

இன்று மதியம் பனியும், மழையும் கலந்து கொட்டிக்கொண்டிருந்தன. நனைந்தபடியே நிலக்கீழ் தொடருந்து நிலையத்துக்கு வந்துசேர்ந்தேன். உடையெல்லாம் நனைந்திருந்து.

தொடருந்து வந்ததும் ஏறியமர்ந்துகொண்டேன். தொலைபேசியில் இணையத்துடன் தொடர்பு எடுத்து செய்திகளை வாசித்தபோது நுவரெலியாவில் கடும் பனி, கடும் குளிர் என்றிருந்தது. மலையில் பனிகொட்டியிருக்கும் படத்தையும் போட்டிருந்தார்கள். குளிர் 5 - 6 பாகையாக இருப்பதால் கடுமையான குளிர் நிலவுகிறது என்றும் செய்தி கூறியது. குளிரின் தார்ப்பரியத்தை கடந்த 27 வருடங்களாக நான் அனுபவித்திருப்பதால் அங்கிருப்பவர்களின் நிலை எப்படியிருக்கும் என்பதை புரியக்கூடியதாக இருந்தது.



அந் நினைவுகளில் இருந்து விடுபடுவதற்காய் தமிழ்மகன் எழுதிய "வெட்டுப்புலி" நாவலை எடுத்து வாசிக்கலானேன். அதில் வெள்ளைக்காரனின் குதிரையின் அழகில் மயங்கிய லட்சுமணன் அதை திருடுவதற்காக ஜமீன்தாரின் வீட்டு மரத்தில் ஏறி, திருடும் சந்தர்ப்பத்துக்காய் காத்துக் கொண்டிருந்தான். எனது மனம் முழுவதும் கதையின் விறுவிறுப்பில் லயித்திருந்தது. லட்சுமணனும் குதிரையை ஜமீன்தாரின் வீட்டில் இருந்து திருடி எடுத்துக்கொண்டு அதில் ஏறுவதற்கு முயற்சிக்க, குதிரை தறிகெட்டு ஓடும். இவனும் அதில் விடாக்கண்டனாய் தொங்கிக்கொண்டிருப்பான்.

அந்நேரம் தொடருந்து ஒரு தரிப்பிடத்தில் நின்றிருந்தது. ஒரு அழகியவள் எனக்கு முன்னிருந்த இருக்கையில் வந்தமர்ந்தாள். அவளுடன் இன்னுமொரு பெண்ணும் வந்தார். அவர்கள் இருவரும் தமிழர்கள்.

முதலாமவள் எனக்கு எதிரே உட்கார்ந்துகொண்டாள். என்னை நிமிர்ந்து பார்த்தபோது நான் சிநேகமாய் புன்னகைத்தேன். அவள் கண்கள் மருண்டன. என்னை ஒரு மாதியாகப்பார்த்து பின்பு அருகில் இருந்த பெண்ணைப் பா ந்தாள். அப் பெண் வேறு எங்கோ பார்த்துக்கொண்டிருப்பதை அவதானித்த அவள் முகத்தில் சிநேகமான ஒரு புன்னனை அரும்பி மறைந்தது. அருகில் இருந்து பெண்ணைப் பார்த்தேன். அவர் வேறு உலகில் சஞ்சரிந்திருந்தார்.

# சஞ்சயன் செல்வமாணிக்கம்

# ரயிலில் நடக்கும் இரகசியங்கள்

எனக்கு எதிரே இருந்த பெண் என்னை பார்ப்பதும், நான் அவளை நிமிர்ந்து பார்ப்பதை கண்டதும் தலையைக் குனிவதுமாக இருந்தாள். என்னால் புத்தகத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. மனம் முழுவதும் ஒரு பரவசம் பரவியது. ஒருவித மகிழ்ச்சியை உணர்ந்தேன்.

இப்போ அவள் என்னைப் பார்க்கிறாளா என்பதை புத்தகம் வாசிப்பதுபோன்று பாசாங்கு செய்தபடியே கடைக்கண்ணால் பார்த்தேன். அவள் பார்த்துக்கொண்டே இருந்தாள். நான் திடீர் என்று அவளைப் பார்த்தேன். வெட்கத்துடன் தலையைக்குனிந்துகொண்டாள். பின்பு தனது பனிக்கால தொப்பியினால் கண்களை முடியபடியே தூங்குவதுபோல் பாசாங்குசெய்தாள். நான் வாசிப்பதுபோன்று பாசாங்குசெய்தேன்.

இப்போ அவள் தலையை பின்புறமாய் சரித்து தொப்பினூடாக என்னைப் பார்ப்பது தெரிந்தது. நான் மந்தகாசமான ஒரு புன்னகையை எனது அழகிய முகத்தில் படரவிட்டேன். அதைக் கண்ட அவளின் முகத்தில் புன்னகை தெரிந்தது. மீண்டும் அவள் அருகில் இருந்த பெண்ணை கடைக்கண்ணால் பார்த்தாள். அவர் அப்போது தூங்கி வழிந்துகொண்டிருந்தார்.

எனக்கு குஷி பிடிபடவில்லை. புத்தகத்தை வாசிப்பது போன்று இடையிடையே அவளைப் பார்த்து புன்னகைத்தேன். அவள் முகத்தில் வெட்கம் கலந்த மகிழ்ச்சி தெரிந்தது. என்னை அவளுக்கு பிடித்திருந்தது என்பதை உணர்ந்துகொண்டேன்.

இப்போது நான் புன்னகையில் இருந்து அழகான சிரிப்புக்கு முன்னேறியிருந்தேன். அவளும் அப்படியே. எனக்கு என்னைச் சுற்றியிருந்த உலகம் மறந்துபோனது. மகிழ்ச்சியான மனநிலை வாய்த்திருந்தது.

என்னைப் பார்த்து சிரித்தவள் திடீர் என்று நாக்கைக் காட்டினாள். நான் சுதாரித்துக்கொள்வதற்கு சற்று நேரமாகியது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு எவரும் என்னைப் பார்க்கவில்லை என்பதை நிட்சயப்படுத்தியதன் பின்பு அவளுக்கு நாக்கைக் காட்டினேன். பதிலுக்கு அவள் நாக்கைக் காட்டிவிட்டு அருகில் இருந்த பெண்ணைப் பார்த்தார் அவர் இப்போதும் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தார்.

அடுத்த தரிப்பிடத்தில் நான் இறங்கவேண்டும் என்பதால் புத்தகத்தை எனது முதுகுப்பையினுள் வைத்துக் கொண்டிருக்கும்போது எனது காலினை ஒரு கால் தட்டியது. நிமிர்ந்துபார்த்தேன் அவள் சிரித்தாள். நானும் புன்னகைத்தேன். தொடருந்தில் இருந்து இறங்க முற்பட்டபோது அவர்களும் அதே தரிப்பிடத்தில் இறங்குவது தெரிந்தது. அவர்களுக்குப் பின்னாலேயே நடந்தபடியே அவளின் தலையில் ஒரு தட்டு தட்டியதை அவளுடன் வந்தவர் கண்டுவிட்டார். அவர் குனிந்து அந்த 3 - 4 வயதுக் குழந்தையையும் என்னையும் பார்த்தார். அவளை நோக்கி கையசைத்தேன். அவளும் மயக்கும் புன்னகையுடன் கையசைத்தாள்.

**அந்த புன்னகையில் இன்றைய நாள் அற்புதமாகியது.**

---

# அளவு மீறிய நேசம் கொள்ளல்

(தன்யா)




குருணாகலை மாவட்டத்தில் இடம் பெற்ற ஓர் சம்பவம்........

காதல் வயப்பட்ட இருவர் அனைவர் சம்மதத்துடனும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். காதலி சுமனாவதி காதலன் சமன்குமார மீது மிகுந்த அன்பு பாராட்டுவாள். அவளுக்கு அவனிடம் பிடிக்காத ஒன்றே ஒன்று அவனது குடி. காதலிக்கும் போதும் சரி திருமணத்தின் பின்னரும் சரி அவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தான். என்னதான் தன்னை மீறி குடித்தாலும் அவள் மீது மிகுந்த அக்கறையும் அன்பும் கொண்டவாக இருந்தான் சமன்குமார.

சுமனாவதி எவ்வளோ சொல்லியும் எத்தனையோ முறை சண்டையிட்டும் கூட அவனை திருத்தி அப்பழக்கத்திலிருந்து வெளியில் எடுக்க அவளால் முடியவில்லை. ஒரு நாள் அவன் தன் கழுத்தளவிற்கு குடித்துவிட்டு வீடு வந்திருந்தான். அவனது குடியை இன்றுடன் நிறுத்த வேண்டுமென எண்ணிய அவள் அவன் கண் முன்னே தூக்கிட்டாள். தள்ளாடிக் கொண்டிருந்த அவனால் அவளை தடுக்க முடியவில்லை. காப்பாற்றுவதற்காக அருகில் சென்றவனின் கால் இடருபட்டு அவள் நின்றிருந்த கதிரை கீழே சரிந்தது. அடுத்த இரு நொடிகளுள் அவள் மரணத்தை தழுவிக் கொண்டாள்.

தன் மனைவி இறந்ததை காரணங் காட்டி இன்னும் அதிகமாக குடிக்கத் தொடங்கினான்.

அன்று இரவு 12.40 இருக்கும் பிரதான வீதியால் அவனது முச்சக்கர வண்டியில் தட்டுத் தடுமாறி செலுத்திச் சென்ற வேளையில் ஒரு சந்தியில் மிக மிக அழகிய ஓர் பெண் நின்று கையசைத்தாள். அவளருகில் சென்று எங்கே செல்ல வேண்டும் என சிங்களத்தில் கேட்டான். அவளோ இவனது வீட்டிற்கு முன்னால் செல்லும் சிறு பாதைக்குச் செல்லவேண்டும் என்றாள். போதையின் உச்சியில் இருந்த அவனால் அவளை உணர்ந்து கொள்ள முடியவில்லை.

தனது முச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டான். அவளை அவள் கூறிய பாதையில் இறக்கிவிட்டான். கவனமாக செல்லுமாறும் கூறிவிட்டு தன் வீட்டினுள் வண்டியை செலுத்தினான். வீட்டிற்குள் சென்றதும் படுத்துக் கொண்டான்.

மல்லாக்காக படுத்துக் கிடக்கும் அவன் நிதானத்திற்கு வரும் பொழுது சூரியன் நடு வானிற்கு வந்துவிடும். அதன்பின் ஹயர் செல்வான் பின் மீண்டும் குடிப்பான். குடித்து விட்டு இரவு வீடு திரும்புவான். இதுவே அவனது வழமையாக இருந்த போதிலும் இந்த மூன்று நாட்களாக ஒரு பெண்ணும் தன்னுடன் சேர்ந்து கொண்டமையை மெல்ல அவன் புத்தி ஊகித்துக் கொண்டது.

அன்றும் அவ்வாறே அவன் இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் அதே பெண் வழி மறித்தாள். இவன் சற்று நேரம் அவளை உற்றுப் பார்த்தான். இவனுக்கு பிடிபடவில்லை. அவள் உள்ளே ஏறினாள். அவன் மெல்ல திரும்பி அவள் முகத்தைப் பார்த்து கேட்டான், ஏன் இந்த நேரத்தில் அங்கு செல்கின்றீர்கள்? அதுவும் தனியாக என்றான்.

அதற்கு அவ்வுருவம் தனது அழகிய பற்களைக் காட்டி சிரித்தது. பின் தனது கணவனுடன் சிறிது நேரம் இருப்பதற்காக வருவதாக தெரிவித்தது. அதன் குரலில் இருந்த மென்மையீனத்தினால் அந்த பயணம் சற்று பயங்கரமாக இருப்பதாக உணர்ந்தான். ஏற்றியிருந்த போதை இறங்குவதை உணர்ந்தான்.

அவ்வுருவம், ஏதோ நிறைய நாட்கள் பழகியவர்களைப் போல இன்னும் நீ குடியை நிறுத்தவில்லையா என கேட்டது. கேட்டுக் கொண்டே அவன் பிடரியில் தன் கூரிய நகங்களைக் கொண்ட கைகளை வைத்தது. அவ்வுருவம் தன் அருகில் வருவதை உணர்ந்தான். அப்போதே அவன் மண்டையில் அது சுமனாவதி என உறைத்தது.

தொடரும்...

---

# நெல் விளைச்சல்களும் விற்பனையும்



கடந்த 06.03.2016 அன்று மூதூர் பிரதேசம் செல்ல கிடைத்தது. 3ம் கொலனியில் இருந்து கிளிவெட்டி பிரதான வீதிக்கு வரும் வயல் வெளியூடாக செம்மன் வீதியில் முச்சக்கர வண்டியில் பயணித்துக கொண்டிருந்த வேளை இருமருங்கிலும் வளைந்து காற்றினில் அசைந்தாடி நின்ற நெற்கதிர்கள் மனதை வெகுவாக ஈர்த்தன.

இந்நேரத்தில் தான் ஓட்டுனர், தனது வயல் நிலமும் விளைந்து கிடப்பதை அடையாளப்படுத்தினார். பசியாறும் வயல் விளைநிலத்தை பார்க்கின்ற போது கிடைக்கின்ற மன சந்தோஷம் அறுவடையின் பின் கிடைப்பதில்லை என்று மிகவும் கவலையும் கூறினார். தொடர்ந்து அவர் 1 மூடை (69கிகி) ஒன்றின் விலை ரூபா1,400 மட்டுமே. கீரி சம்பா என்றால் ரூபா3,200 ஆகவும் ஏனைய நெல் வகைகள் இரண்டிற்கும் இடைப்பட்டதாகவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

முச்சக்கர வண்டி பிரதான வீதியை வந்தடைந்தது. திருகோணமலை செல்வதற்காக பேருந்து தரிப்பிடத்தில் நின்றிருந்த போது அங்கு ஓர் அரிசிஆலை இருந்தது. ஆலை ஊழியரிடம் அரிசி விலை குறித்து கேட்ட போது, விற்பனைக்கு தற்போது தம்மிடம் அரிசி இல்லை எனவும் அவித்து குற்றிய அரிசி 1கிகி ரூபா 70 இற்கு விற்பதாக கூறினார். ஆனால் 1கிகி நெல்லின் விலை வெறும் இருபது ரூபா இருபத்தியெட்டு சதம் மாத்திரமே.

அதன் பின் வீதியோரத்தில் சீமெந்து இடப்பட்ட திடலில் நெற்கள் பரப்பி காயவிடப்படும் இடத்தில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவருடன் இரு இளைஞர்களும் இணைந்து பையினுள் நெல்லிட்டு மூடை தைத்துக் கொண்டிருந்தனர். அவ்விடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடிய போது, வயல் செய்கை பற்றிய அவர்களது மனக்கிடக்கைகள் சில வெளியானது.

நிலப் பண்படுத்தலில் இருந்து பையில் இடும் வரை கருவுருவாகி குழந்தை பிரசவிக்கும் வரை பார்த்து பார்த்து செய்வது போல் மிகக் கவனமுடன் செயல்பட்டாலும் எமக்குக் கிடைக்கும் பலன் அரிதே.

வரும் வியாபாரிகள் அந்த இடத்திலிருந்தே தொலைபேசி மூலம் தமது இலாபத்தினை உடன் நிர்ணயிக்க முடிவது போல் எம்மால் முடிவதில்லை.

நாலு மாத காலம் வயலிலேயே கண்விழித்து இரவு, பகல், மழை, வெயில், பசி, பாதுகாப்பற்ற இரவு வேளைகள் அனைத்தையும் சுமந்த எம்மைப் போன்ற விவசாயிகளுக்கு சந்தோசம் என்பது கிட்டுவதில்லை என்பதை நினைத்தால் மனதிற்கு மிகவும் வேதனையாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேசமயம் அரசினது நிர்ணய விலை கொள்வனவு தாமதமாகும் காலங்களில் தொழிலுக்காக கடன்பட்டவர்களாலும், தொடர்ந்து வாழ்க்கைச் செலவை கொண்டு செல்ல வழியின்றியும் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றோம் என்றார். அத்துடன் பலனில்லாத பயிர்ச்செய்கை ஆகிவிட்டது என்றும் தனது மனகவலையை கூறி முடித்தார்.

மலைநேயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கும் சீனாவுக்கும் ஒரே நேரத்தில் இந்தியா வைக்கும் செக்

**தென்னாசியாவின் ஒரேயொரு மிகப்பாரிய இறங்கு துறைமுகமாக உள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையின் ஏகபோக ஆட்சியை மட்டும் முடிவிற்குக் கொண்டு வருவதோடு இந்திய மா கடலில் இந்தியா தனது கரையோர செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும் அனைத்துலக கப்பல்களை ஈர்ப்பதற்குமான ஒரு மூலோபாயமாக அமைந்துள்ளது.**

நித்தியபாரதி
www.puthinappalakai.net

தென்னாசியாவின் ஒரேயொரு மிகப்பாரிய இறங்குதுறைமுகமாக உள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையின் ஏகபோக ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாது இந்திய மாக்கடலில் இந்தியா தனது கரையோர கப்பல் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும், அனைத்துலக கப்பல்களை ஈர்ப்பதற்குமான ஒரு மூலோபாயமாக அமைந்துள்ளது.

இவ்வாறு Foreign Policy ஊடகத்தில் SHREY VERMA எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

கொழும்பு துறைமுகத்தின் அனைத்துலக கொள்கலன் முனையத்தில் 2014 செப்ரெம்பரில், சீன இராணுவ நீர்மூழ்கி தரித்து நிற்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட போது, பாதுகாப்பு கட்டமைப்புகளுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததால், அப்போது புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு சோதனையாக இருந்தது.

சீனாவின் விரிவாக்கப்பட்ட கடல் சார் ஆதிக்கம் மற்றும் அதன் துறைமுக அபிவிருத்தி மூலோபாயத்தை உள்ளடக்கிய கரையோர பட்டுப் பாதைத் திட்டமானது, பாரம்பரிய செல்வாக்குமிக்க இந்திய மாக்கடல் பிராந்தியம் மீதான இந்தியாவின் ஆதிக்கத்திற்கு தொடர்ந்தும் சவாலாக உள்ளது.

எனினும், இந்தியாவின் கப்பல் சட்டங்கள் மீது மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் கொழும்பில் சீனாவின் நிதியில் மேற்கொள்ளப்படும், கொழும்பு அனைத்துலக கொள்கலன் முனைய கேந்திர மையம் திட்டம் வெற்றி பெறுவதைத் தடுப்பதற்கும், இதன் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் உதவும் எனக் கருதப்படுகிறது.

கப்பல் போக்குவரத்தில் ஈடுபடும் பாரிய நிறுவனமான A.P. Moller Maersk Group ஆல் கட்டுப்படுத்தப்படும் மேற்கு இந்தியத் துறைமுகமான APM Terminals Pipavav கடந்த மாதம் 800 Hyundai கார்களை இறக்குமதி செய்வதற்கான கோரலைப் பெற்றது. இந்தியாவின் கிழக்குக் கரையோரத்திலுள்ள சென்னை துறைமுகத்தில் இந்தக் கார்கள் கப்பல்களில் ஏற்றப்பட்ட பின்னரே இதற்கான அனுமதி கோரப்பட்டது.

இந்தியாவின் இரு துறைமுகங்களுக்கு உள்ளே பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான கரையோர வணிகச் சட்டத்தில் சிறிய தளர்வை ஏற்படுத்தலாம் என இந்திய அரசாங்கம் தீர்மானம் எடுத்து ஐந்து மாதங்களின் பின்னரே 800 கார்கள் கப்பல்களில் ஏற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்று-ள்ளது.

அமெரிக்காவின் ஜோன்ஸ் சட்டத்திற்கு ஒப்பானதாகவே, இந்தியாவின் கரையோர வணிகச் சட்டமும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு இரண்டாவது இடத்தையும் இந்தியாவின் சரக்குக் கப்பல்களுக்கு முன்னுரிமையையும் வழங்குகிறது. அதாவது சரக்குகளை ஏற்றுவதற்குப் பொருத்தமான இந்தியாவில் பதியப்பட்ட சரக்குக் கப்பல்கள் இல்லாதுவிடத்து மட்டுமே ஏனைய அனைத்துலகக் கப்பல்களுக்கான அனுமதி வழங்கப்படுகிறது.

ஆனால் தற்போது இந்தச் சட்டத்தில் சிறியதொரு தளர்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், இந்தியாவின் கரையோரத்தில் இந்தியச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யாத அனைத்துலகக் கப்பல்களும் குறிப்பாக அனைத்துலக பாரந்தூக்கி கப்பல்களான மேர்ஸ்க் மற்றும் மெடிற்றெறேனியன் கப்பல் நிறுவனம் போன்றன சரக்கு வணிகத்தில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்படலாம். இதனை இந்திய அரசாங்கம் நிறுத்த முடியும்.

இந்தியாவின் கரையோர வணிகச் சட்டங்களின் "ஒட்டுமொத்த தளர்வையும் ஏற்படுத்தும் இறுதி வரைபு ஒன்று விரைவில் பிரதமர் நரேந்திர மோடியால் அங்கீகரிக்கப்படலாம் எனவும், இதன்மூலம் அனைத்துலக பாரிய கப்பல் போக்குவரத்துக்களுக்காக இந்தியாவின் பிராந்திய நீர்நிலைகள் மற்றும் துறைமுகங்கள் திறந்துவிடப்படலாம் எனவும் இந்திய கப்பற்துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்தார்.

செலவுக் குறைப்பு மற்றும் பொருளாதார சார் நலன்களைக் கருத்திற் கொண்டே, மிகப் பாரிய கொள்கலன் தாங்கிகள் ஆழ்கடல் துறைமுகங்களுக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துறைமுகங்களிலிருந்து சிறிய மற்றும் ஆழமற்ற துறைமுகங்களுக்குப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவின் கரையோர வணிகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தளர்வு நிலையானது இப்பிராந்தியத்தில் பொருட்களைக் கொண்டு செல்வதில் சில மாற்றங்களை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது. இந்தியாவில் கடந்த பத்தாண்டாக கப்பல் ஏற்றுமதிச் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போதிலும், இந்தியாவின் கொள்கலன்களின் பெரும்பாலானவை கொழும்பு மற்றும் சிங்கப்பூர் துறைமுகங்களின் ஊடாகவே தற்போது இடம்பெறுகின்றன.

ஏனெனில் அனைத்துலக கடல் வழிகளுக்கு அருகில் பாரிய ஆழ்கடல் துறைமுகங்களை இந்தியா தற்போது கொண்டிருக்காமையே இதற்கான காரணமாகும். இந்தியாவின் கரையோர வணிகச் சட்டமானது பிராந்தியக் கடற்பரப்பில் அந்நிய நாட்டுக் கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான தடைவிதிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள கரையோர வணிகச் சட்டமானது இந்தியாவிற்குள்ளே உள்ள இரு துறைமுகங்கள் தமக்கிடையே பொருட்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கு இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல்கள் மாத்திரமே ஈடுபட முடியும்.

இதேபோன்று இந்தியாவில் பதிவு செய்யப்படாத கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களில் தரித்து நிற்பதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சட்ட நடைமுறைகள் காரணமாக, இந்தியத் துறைமுகங்களில் தமது கப்பல்களைத் தரித்து நிறுத்துவதற்குப் பதிலாக சில வெளிநாடுகள் தமக்குச் சொந்தமான கப்பல்களைத் தரித்து நிறுத்துவதற்கு கொழும்புத் துறைமுகத்தைப் பயன்படுத்துகின்றன.

கொழும்பு அனைத்துலக இறங்குதுறைமுகம் போன்ற துறைமுகங்கள் மற்றும் சிறிலங்கா துறைமுக அதிகாரசபை போன்றன இந்தியப் பொருட்களின் ஏற்றுமதிச் செயற்பாடுகளை அதிகம் மேற்கொள்கின்றன. இந்தியாவின் வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்துக்களை கொழும்பு தனது அதிகாரத்தின் கீழ் செயற்படுத்துகிறது.

2014 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் இந்தியாவின் கடல்வழிச் செயற்பாட்டின் 48 சதவீதம் கொழும்பின் கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற்றது. இதேபோன்று கடல்வழியின் ஊடான இந்தியாவிற்கான வெளிநாடுகளின் பொருள் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மையமாக சிங்கப்பூர் இரண்டாம் இடத்தில் விளங்குகிறது. இச்செயற்பாடுகளின் 22 சதவீதமானது சிங்கப்பூரின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவின் மிக நெருங்கிய துறைமுகம் ஒன்றிலிருந்து 175 கடல்மைல்கள் தூரத்தில் அமைந்துள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையானது இந்தியாவிற்கான பொருள் இறக்குமதி மையமாக விளங்குகிறது.

இந்தியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குமான கடல்வழிப் போக்குவரத்து ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாடுகள் 45 சதவீதமாகக் காணப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே, இந்தியத் துறைமுகங்கள் நோக்கி கப்பல்களைத் திசைதிருப்புவதற்காக அனைத்துலக கப்பல் போக்குவரத்து வழிகள் தொடர்பாக இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு கோட்பாட்டு மாற்றங்களும் சீனாவின் நிதி ஆதரவுடன் செயற்படும் கொழும்பு அனைத்துலக இறங்குதுறைமுகத்தின் எதிர்கால செழுமையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்.


கொழும்புத் துறைமுகத்தில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும், குறிப்பாக இது சீன அரசின் ஆதரவில் செயற்படுகின்றமை போன்றன இந்தியா தனது கடல் சார் வணிகச் சட்டத்தில் தளர்வை ஏற்படுத்துவதற்கான காரணிகளாக இருக்கலாம்.

இதுமட்டுமல்லாது, இந்தியாவின் தென்கரையோரத்தில் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள விழிஞ்சத்தில் ஆழ்கடல் துறைமுகம் அமைக்கப்-படுகிறது. புதிதாக அமைக்கப்படும் விழிஞ்சம் துறைமுகத்திற்கு கரையோர வணிகச் சட்டம் தளர்த்தப்படுவதற்கான திட்டத்தை இந்திய அரசாங்கம் கடந்த டிசம்பரில் அறிவித்தது. இத்துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் 2018 நடுப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விழிஞ்சம் துறைமுக-மானது கிட்டத்தட்ட 66 அடி ஆழத்தில் அமைக்கப்படவுள்ளது. இது ஒரு ஆழ்கடல் துறைமுகமாக அமைக்கப்படும்.

எதிர்காலத்தில் கொழும்பு அனைத்துலக இறங்கு துறைமுகத்திலிருந்து கப்பல்களை விழிஞ்சம் போன்ற இந்தியத் துறைமுகங்கள் நோக்கி திசை திருப்புவதை இந்தியா நோக்காகக் கொண்டுள்ளதால் இந்திய அரசாங்கத்தின் தளர்த்தப்படும் கடல்வணிகச் சட்டம், தொடருந்துப் பாதைகள் மற்றும் வீதிகள் போன்றவற்றைத் தொடுக்கும் வகையில் உருவாக்கப்படும் விழிஞ்சம் ஆழ்கடல் துறைமுகம் போன்றன கணிசமான செலவுகளைச் சிக்கனப்படுத்துவதையும் அனைத்துலக கப்பல்கள் மூலம் பாரிய பொருளாதார நலன்களையும் அடைந்து கொள்ளலாம்.

தென்னாசியாவின் ஒரேயொரு மிகப்பாரிய இறங்குதுறைமுகமாக உள்ள கொழும்பு அனைத்துலக இறங்குதுறையின் ஏகபோக ஆட்சியை மட்டும் முடிவிற்குக் கொண்டு வருவதோடு மட்டுமல்லாது இதற்கப்பால் இந்திய மாக்கடலில் இந்தியா தனது கரையோர கப்பல் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும், அனைத்துலக கப்பல்களை ஈர்ப்பதற்குமான ஒரு மூலோபாயமாக அமைந்துள்ளது.

இதற்கும் மேலாக, கொழும்பின் சீன ஆதரவுத் துறைமுகம் தொடர்பில் இந்தியா கொண்டுள்ள பூகோள அரசியல் ஆபத்தைக் குறைப்பதற்கான இதன் முயற்சிகளுக்கும் இந்தியாவின் இந்த மூலோபாயமானது சீனாவின் இந்திய மாக்கடல் மீதான செல்வாக்கைக் குறைப்பதற்கும் துணைநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## இறால் வறுவல்

**தேவையான பொருட்கள்**

இறால் – 1 கப், வெங்காயம் – 2, தக்காளி – 2, இஞ்சி பூண்டு பேஸ்ட் – 2 கரண்டி, தனித்தூள் – 2 கரண்டி, கரம் மசாலா – 1 கரண்டி, சீரகத் தூள் - 1 கரண்டி, மிளகாய்த் தூள் – 1 கரண்டி, மஞ்சள் தூள் – 1 சிட்டிகை, எண்ணெய் – 2 கரண்டி, மிளகு – 2 கரண்டி, உப்பு – தேவைக்கேற்ப, கொத்தமல்லி – தேவையான அளவு, கடுகு - தாளிக்க தேவையான அளவு

### செய்முறை

முதலில் மிளகை மிக்சியில் போட்டு ஒன்றிரண்டாக அடித்து வைத்துக் கொள்ளவும். பின்னர் தாச்சியில் எண்ணெய் ஊற்றி கடுகு, சேர்த்து தாளிக்கவும். கடுகு வெடித்ததும் அதனுடன் வெங்காயம் சேர்த்து வதக்கவும். வெங்காயம் வதங்கியவுடன் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கவும்.

பின் அதனுள் தக்காளியை சேர்த்து வதக்கவும். இவை அனைத்தும் நன்றாக வதங்கியவுடன் தனித்தூள், மஞ்சள் தூள், மிளகாய் தூள் சேர்த்து வதக்கவும். பின் இறாலை சேர்த்து நன்றாக கலந்து விடவும். தண்ணீர் சேர்த்து இறாலை 10 நிமிடங்கள் வரை வேக விடவும்.

இறால் வெந்தவுடன் மிளகு தூள், சீரகத் தூள், கரம் மசாலா சேர்த்து 2 நிமிடங்கள் கொதிக்க வைத்து கொத்துமல்லி தூவி இறக்கவும்.

இதே முறையை கணவாய்க்கும் செய்யலாம்.



## ஒற்றைத் தலைவலிக்கு என்ன செய்யலாம்

### எப்படி கண்டுபிடிப்பது?

ஒற்றைத் தலைவலியை மருத்துவர்கள் கண்டுபிடிப்பது என்பது கடினமான ஒன்றாகும், ஏனெனில் மற்ற விளைவுகளும் இதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

மண்டையின் உள்ளே இரத்தப்போக்கு ஏற்படுதல், மூளையில் உள்ள மென்படலங்களுக்கு இடையே இரத்தம் உறைதல், மூளையில் இரத்த நாளங்கள் விரிவடைதல். மூளை அல்லது தண்டுவடத்தில் அலர்ஜி ஏற்படுதல், சைனஸ் பிரச்சனை, கட்டிகள் ஏற்படுதல் போன்ற காரணங்கள் ஆகும்.



### சிகிச்சைகள்

ஒற்றைத் தலைவலியை குணப்படுத்துவதற்கு எவ்வித சிகிச்சையும் இல்லை, அதனால் இதிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை பின்பற்றலாம்.

- அளவான தூக்கம்.
- மன அழுத்தத்தை குறைத்தல், நிறைய தண்ணீர் குடிப்பது.
- தியானம் மேற்கொள்ளுதல்
- குறிப்பிட்ட உணவுகளை தவிர்த்தல், உதாரணத்திற்கு சொக்லேட், சிவப்பு ஒயின், ஆல்கஹால், காபி, சீஸ், சாஸ் வகைகள், ஐஸ் க்ரீம், வாழைப்பழம், மாமிசங்கள்.
- முறையான உடற்பயிற்சி மேற்கொள்ளுதல்.

முற்றும்

## அழகுக் குறிப்பு

**முகத்திற்கு அழகு சேர்ப்பதே கண்கள் தான், கண்கள் பொலிவிழந்து காணப்பட்டால் முகமே சோர்ந்து காணப்படும்.**

## கண்களில் கருவளையம் போக்க

- தினமும் கண்களை சுற்றியுள்ள பகுதிகளில் தேனை தடவி, ஒரு மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவினால் கருவளையம் நீங்கிவிடும்.
- ஒரு தே.கரண்டி வெள்ளரிக்காய் சாறுடன், 2 தே.கரண்டி தேன் கலந்து தினமும் தடவி வந்தால் கண்கள் கவர்ச்சியாக இருக்கும்.
- அரை தே.கரண்டி பாதாம் எண்ணெயுடன் 4-5 துளிகள் தேன் சேர்க்க வேண்டும், இதனை தடவி அரைமணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் கருவளையம் விரைவில் நீங்கும்.
- இதுமட்டுமின்றி வாழைப்பழத்துடன் தேன் சேர்த்து தடவ வேண்டும், அரைமணி நேரம் கழித்து கழுவினால் கண்கள் கவர்ச்சியாக இருக்கும்.
- எலுமிச்சை சாறு மற்றும் தக்காளி சாற்றை கலந்து தடவி வந்தால் கருவளையங்கள் நீங்கும்.
- ஒரு சிறிய அளவுள்ள உருளைக்கிழங்கை துருவி, அதில் இரண்டு ஸ்பூன் எடுத்து அதை பிழிந்து சாறு எடுக்கவும். ஒரு பஞ்சின் உதவியுடன், இந்த சாற்றை உங்கள் கண்களைச் சுற்றி தடவுங்கள். அது காய்ந்தவுடன் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். இதை படுப்பதற்கு முன் வழக்கமாக செய்து வந்தால், கருவளையங்களை வெளிற வைத்து விடும்.
- கஸ்தூரி மஞ்சள், சிவப்பு சந்தனம் ஆகியவற்றை சம அளவில் கலந்து தினமும் பூசி வந்தால் கண்களின் கீழே உள்ள கறுப்பு வளையம் மாறும்.



## அழகு சேர்க்கும் தயிர்

பாலைத் தயிராக மாற்றும் பக்டீரியா குடலில் உருவாகும் நோய் கிருமி பக்டீரியாவின் வளர்ச்சியை தடுக்கிறது. மேலும் நன்மை தரும் பக்டீரியாக்களை உருவாக்குவதால், ஜீரணி சக்தியை தூண்டி வயிற்று உபாதைகளை சரி செய்கிறது.

- ஒரு கை நிறைய தயிரை எடுத்து தலையில் நன்றாக தேய்த்தால் தூக்கம் நன்றாக வரும்.
- மெனோபாஸ் பருவத்தை எட்டப்போகும் பெண்களுக்கு தயிர் மிகவும் உபயோகமாகிறது. உடலுக்குத் தேவையான அதிக கல்சியத்தை தயிர் வழங்குகிறது.
- வெண்ணெய் காய்ச்சி இறக்கும் போது சிறிது தயிர் சேர்த்தால் நெய் வாசமாக இருக்கும். புளித்த தயிரை தலையில் தேய்த்து சுத்தம் செய்தால் தலை முடி மிருதுவாக இருக்கும்.

## கபாலா முறை பற்றி ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்

எமது நாடுகளிலிருந்து அநேகம் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதும் அந்நாடுகளுக்கு சென்ற பிறகு ஒழுங்கான சம்பளம் கிடைப்பதில்லை அந்த வீட்டெஜமானர்கள் துன்புறுத்தலிலிருந்து தப்பிச்செல்லல் வீட்டெஜமானர்களால் துன்புறுத்தப்பட்டு மரணமடைதல் என பல செய்திகளை நாம் அன்றாடம் கேள்விப்படுகிறோம். இருந்தாலும் இன்றும் எம்நாட்டுப் பெண்கள் குடும்ப வறுமை பொருளாதார நெருக்கடிகளை காரணம் சொல்லி மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றனர்.

ஆண்கள் செல்வதெனின் தமது சொந்த பணத்தை செலவழித்தே செல்ல வேண்டும். ஆனால் பெண்கள் செல்வதாயின் கடவுச்சீட்டு வீசா போக்குவரத்து செலவு என யாவற்றையும் அவர்களே பார்த்துக் கொள்கின்றனர். எனவே எமது பெண்களுக்கு அது இலகுவாகவும் வாய்ப்பாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக சொல்லப்போனால் யுத்தத்தின் பின் கணவனை இழந்த, கணவன் காணாமல் ஆக்கப்பட்ட பெண்கள் தமது குடும்பத்தை முன்னேற்ற இந்த வழி சிறந்தது என சிந்திக்கின்ற நிலை தற்போதுள்ளது.

என்றாலும் நாம் செல்லும் நாடுகளில் தொழிலாளர் தொடர்பாக என்ன முறைகள் உள்ளன? நாம் எவ்வாறு எம்மை பாதுகாத்துக்கொள்வது? என அறிந்திருத்தல் வேண்டும். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள கபாலா முறைமை தொடர்பாக அறிந்திருக்க வேண்டும்

கபாலா முறைமை என்றால், 1960 ஆம் ஆண்டிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப்பணியாளர்களுக்காக பின்பற்றப்படும் முறைமையே கபாலா முறைமை ஆகும். இம் முறைமை ஆனது கபீல் என்ற முறையிலிருந்து கொண்டுவரப்பட்டது. கபீல் என்றால் ஒரு நபரை விலை கொடுத்து வாங்குதல் என்பதாகும். இம்முறைமையின் கீழ் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணியாளராக செல்பவர்கள் அரை அடிமை நிலையில் உள்ளனர் எனலாம்.

அந்நாடுகளுக்கு பணிபுரிய சென்று தொழிலை பழகிய பின் ஒப்பந்த காலம் முடியாமல் வேறு இடம் மாறிவிட்டால் அல்லது திரும்பிவிட்டால், அம்முதலாளிகள் பாதிக்கப்படுவர் எனவே அம் முதலாளிகளை பாதுகாக்கவும் வெளிநாடுகளில் இருந்த அங்கு செல்லும் பணியாளர்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுமே இம்முறை கொண்டுவரப்பட்டது.

குறிப்பாக அந்நாடுகளில் சட்டத்தின் முன் வீட்டுப்பணியாளர்கள் தொழிலாளராக ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவே தொழிலாளர் சட்டமானது வீட்டுப் பணிய்யாளர்களுக்கு உரித்துடையதல்ல எனவே தமது சம்பளப்பிரச்சினை அல்லது துன்புறுத்தலுக்கெதிராக அந்நாடுகளில் இவர்கள் வழக்கு தொடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அங்குள்ள ஒரு கபீல் தனக்கு ஒரு வீட்டுப்பணியாளர் தேவை என அங்குள்ள ஏஜென்சியிடம் அறிவித்து பணம் வழங்குகின்றார். அவ் ஏஜென்சி இங்குள்ள ஏஜென்சியிடம் தொடர்பு கொண்டு கதைக்கின்றார். இங்குள்ள ஏஜன்சி எம்மை தொடர்பு கொண்டு எம்மை அனுப்பி வைக்கின்றார்.

இவர்களை பணம் கொடுத்து அழைத்தெடுக்கும் கபீலே இவர்களுக்கு பொறுப்பானவராகிறார். இங்கு நாம் பணத்தை பெற்று ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு விட்டால் அவ் கபாலா முறைமைக்குள் உள்ளடங்கிவிடுகின்றோம்.

அதன் பிறகு அந்நாட்டிற்கு நாம் கட்டாயம் சென்றாக வேண்டும் அத்துடன் அங்கு ஏதேனும் பிரச்சினை அல்லது சம்பளம் தரவில்லை என நாம் வேறு இடம் மாறினால் அல்லது அக் கபீலின் அனுமதியின்றி Exit visa பெறாமல் நாடு திரும்புதல் அந்நாட்டின் சட்டப்படி குற்றவியல் குற்றமாக கருதப்படும்.

**எம்மை பாதுகாத்துக்கொள்ள என்ன செய்யலாம்**

இங்கிருந்து செல்லும் போதே சில முன்னாயத்தங்களை நாம் செய்யலாம் முதலில் கடவுச்சீட்டை பெற்றுக்-கொள்வதற்காக கொழும்பு செல்லுதல் அங்கு முகவரால் பாதிக்கப்படுதல் என பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே வேலைவாய்புக்காக வெளிநாடு செல்ல திர்மானித்தவுடனேயே கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டாவதாக குறிப்பிட்ட முகவர் போலி முகவரா பதிவுசெய்யப்பட்டவரா என அறிந்து கொள்ள வேண்டும். அவரது லைசன்ஸ் இலக்கத்தை பெற்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் சென்று பரிசோதித்துக் கொள்ளலாம் அல்லது www.slbfe.lk என்ற இணைய தளத்தில் சென்று பரிசோதித்துக் கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட முகவர் எனின் அவர் குறிப்பிட்ட வேலை வாய்ப்பு அவரிடம் உண்டா அதற்கு எவ்வளவு சம்பளம் குறிப்பிட்டள்ளனர் எனவும் பரிசீலித்துக் கொள்ளலாம்.

முக்கியமாக இங்கிருந்து புறப்படும் முன்னர் கடவுச்சீட்டு பிரதி ஒப்பந்த பிரதி அந்நாட்டிலுள்ள எஜமானரின் விபரம் ஆகியவற்றை இங்குள்ள ஒருவரிடம் கொடுத்து வைக்க வேண்டும். அத்துடன் அந்நாட்டில் உள்ள இலங்கை எம்பசியின் விலாசத்தையும் பெற்று வைத்திருத்தல் வேண்டும். இச்செயன்முறைகளை முறைப்படி செய்வது கால தாமதம் ஆகலாம் எனினும் முறைப்படி செல்வதே பாதுகாப்பானது. பாதுகாப்பான வழிகளை தெரிந்து அதன்வழி செயற்படுவது அவசியம் இல்லையெனில் பாதிக்கப்படுவது பெண்களாகவே இருக்கும்.

**செல்வி.க.விஜுஷியா**
**செயலாளர், திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 20

01. 1 தொடக்கம் 9 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத் தொகை?

.............................................

02. இவ்வுருவிலுள்ள முக்கோணிகள்? ...............................



04. பின்வரும் ஒவ்வோர் உருவையும் ஆங்கிலத்தில் எழுதுக.





.............................................  .............................................

06. சதுரக்குறியீடுகள் பத்திலும் குறைந்த இலக்கங்களையே குறிக்கின்றன. எனின் ✹ குறிக்கும் இலக்கம்?

□
□
□
✹ 1

.............................................

07. ஒரு வருடத்தின் நாட்காட்டியின் படி செப்டம்பர் மாதம் 01ம் திகதி புதன்கிழமை எனில், அக்டோபர் முதலாம் திகதி என்ன கிழமை?
1. வியாழன் 2. வெள்ளி 3. சனி

08. ஒரு லொறியினுள் 6840கி.கி நிறையுள்ள பொருட்களை வைக்கலாம். தற்போது லொறியினுள் 3965கி.கி நிறையுடைய பொருள் உள்ளது. லொறியினுள் இன்னும் வைக்கக் கூடிய பொருளின் நிறையைக் காண்க.
1. 10805கி.கி 2. 2515கி.கி 3. 2875கி.கி

09. கருத்துப் பிழையுள்ள கூற்றினை இனங்காண்க.
1. வாழை ஒரு செடியாகும். வாழை எமது நாட்டில் வளர்கிறது.
2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்.

3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்றது.
1. 1 2. 2 3. 3

இலக்கம் 10 - 14 வரையுள்ள வினாக்களுக்கு உரிய சரியான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 5பாடசாலைகளில் இருந்து ஒரு பரீட்சை நிலையத்திற்கு வந்திருந்த மாணவர்களின் விபரங்கள் பின்வருமாறு

| பாடசாலை | சிங்கள மொழி மூலம் | | தமிழ்மொழி மூலம் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| பாத்திமா ம.வி | 82 | 78 | - | - |
| கரவில ம.வி | 132 | - | - | - |
| பந்துவில ம.வி | - | - | 43 | 35 |
| மலை மகள் ம.வி | 76 | 69 | 41 | 40 |
| மகளிர் ம.வி | - | - | - | 80 |
| | 437 | | 239 | |

10. சிங்களமொழி மூலம் ஆண் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
.............................................

11. மலை மகள் பாடசாலையில் இருந்து வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? .............................

12. சிங்கள மொழி மூல மாணவர்களுக்கும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கும் வித்தியாசம் யாது? .............................

13. விடைகள் எழுதுவதற்கு ஆரம்பத்தில் ஒவ்வொரு மாணவனுக்கும் 5 கடதாசிகள் வீதம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கடதாசிகளின் மொத்த எண்ணிக்கை யாது? .............................

14. ஒரு வகுப்பறையில் அமரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 20 மேற்படக்கூடாதெனவும் ஒரு மொழி மூல மாணவர் மட்டும் ஒரு வகுப்பறையில் அமர வேண்டுமெனவும் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு தேவையான வகுப்பறைகள் எத்தனை?

.............................................

**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**



# சிறுவர் முரசு



சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## கனவுகள் பலிக்கும்!!

ஓர் மன்னன் அவர் காணும் கனவுகள் எல்லாம் அப்படியே பலித்து விடும் என்ற மூடநம்பிக்கை கொண்டிருந்தான்.

அவனது மந்திரியும், அப்படி நினைப்பது சரியல்ல என எவ்வளவு கூறியும் அவர் அதனை ஏற்கவில்லை.

ஓரிரவில் மன்னன் தான் படுத்துத் தூங்கும் அறையில் ஒரு பாம்பு வந்தது போலவும், அதனை அந்த அறையைக் காவல் காத்த வீரன் கண்டு கொன்று விட்டது போலவும் கனவு கண்டான். மறுநாள் காலை தன் கனவை மந்திரியிடமும் சேனாதிபதியிடமும் கூறி அந்தக் கனவு பலிக்குமோ என்று கவலைப்பட்டார்.

மன்னன் தன் கனவைக் கூறிக் கொண்டிருந்தபோது மல்லப்பன் என்ற காவலாளி கேட்டுக் கொண்டிருந்தான். அவன் மனதில் மன்னரின் தயவைப் பெற அக்கனவை உபயோகப்படுத்திக் கொள்ள நினைத்தான்.

அவன் நள்ளிரவில் தான் பிடித்து வந்த பாம்பை மன்னனின் படுக்கை அறைக்குள் விட்டான். பிறகு அந்த அறையின் கதவை தடதடவென்று தட்டினான்.



மன்னனும் கதவைத் திறந்து என்ன என்று கேட்க, மல்லப்பனும், ஒரு பாம்பு தங்கள் படுக்கை அறைக்குள் புகுந்ததைப் பார்த்தேன், எனக் கூறி சுற்றிலும் பார்த்தான். ஓரிடத்தில் தான் விட்ட பாம்பு இருப்பதைக் கண்டு அதை அவன் அடித்துக் கொன்றான். மன்னனும் அவனைப் பாராட்டித் தன் முத்து மாலையைப் பரிசாக அளித்தான். மறுநாள் காலை மன்னன் தான் கண்ட கனவு பலித்ததை மந்திரிக்கும், சேனாதிபதிக்கும் இரகசியமாகக் கூறினான்.

அவர்கள் இருவருக்கும் மல்லப்பன் செய்த ஏமாற்று வேலை அது என்பது தெரிந்து விட்டது. அதனால் அவர்கள் மன்னனிடம் எதுவும் பேசவில்லை. அவர்கள் சேனாதிபதியின் அறைக்குப் போய் மல்லப்பனை அங்கு வரவழைத்தனர். மந்திரி நயமாக மல்லப்பனைக் கேட்டும், அவன் உண்மையைச் சொல்லவில்லை.

ஆனால், சேனாதிபதி அவனை மிரட்டி, அடிஅடி என அடித்த பிறகே மல்லப்பன் உண்மையைக் கக்கினான். இதற்குச் சில நாட்களுக்குப் பின் மன்னன் ஒரு கனவு கண்டான். அதில் மல்லப்பன் தன் எதிரியான ஒரு மன்னனோடு சேர்ந்து சதி செய்து தன்னைக் கொல்வது போல அவர் கண்டான். உடனே அவர் கண்விழித்துக் கொண்டு மல்லப்பனைக் பிடித்து சிறையில் அடைக்குமாறு கட்டளை இட்டான். இதை அறிந்த மல்லப்பன் பயந்து ஓடி விட்டான். மறுநாள் அவன் மந்திரியைக் கண்டு, தன்னை காப்பாற்றுமாறு கேட்டான். மந்திரியும், காப்பாற்றுகிறேன். ஆனால் நீ இரண்டு தடவைகளில் செய்த ஏமாற்று வேலைகளை மன்னனிடம் கூறி ஒப்புக் கொள்ள வேண்டும். அது எப்போது என நான் சொல்லும்வரை நீ என் வீட்டு அறையில் ஒளிந்து கிட என்றான். மல்லப்பனும் அதற்குச் சம்மதித்தான். சில நாட்கள் சென்றன.

மன்னன் தினமும் மல்லப்பன் தன்னைக் கொல்ல வருவானோ என்று பயந்து கொண்டிருந்தான். ஒருநாள் மந்திரி, அரசே! மல்லப்பன் தன் ஊரில் பாம்புக் கடியால் இறந்து விட்டான் என்றான். மன்னனும், அப்பாடா! இனி மல்லப்பன் வருவான் என்ற பயம் இல்லை. நிம்மதியாக இருக்கலாம் என்றான் மகிழ்ச்சியுடன்.

ஒருவாரம் சென்ற பின் மந்திரி மன்னனிடம், மல்லப்பன் இப்போது உங்கள் கனவில் வருகிறானா? எனக் கேட்டான். மன்னனும் சிரித்தவாறே, இறந்தவன் எப்படி வருவான்? எனக் கேட்டான்.

மந்திரியும், மல்லப்பன் இறக்கவில்லை. உயிருடன்தான் இருக்கிறான். அவனை நான் பிடித்து அடைத்து வைத்திருக்கிறேன். நீங்கள் கனவுப்படி நடக்கும் என நினைத்தது தவறு என்றான்.

மல்லப்பன் மன்னனின் கால்களில் விழுந்து தான் செய்த ஏமாற்று வேலைகளுக்காகத் தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். மன்னன் அதன் பின் கனவுகள் அப்படியே பலிக்கும் என்ற மூடநம்பிக்கையை மன்னர் விட்டு விட்டார்.

சிந்திக்க

**மனதுக்கு மிகவும் பிடித்தவர்களிடம் மனம் விட்டு பேசுங்கள் : மரண வலி கூட பறந்து போய் விடும்.. ..**

**பாராட்டு பெறுவோர்**

சிறீஸ்கந்தராஜா யோகேஸ்வினி
01, கதிர்காம தம்பி வீதி, உப்புவெளி

செல்வன். கு. சதர்ஷன்,
14, ஸ்ரீலங்கா றெஜிமெண்ட் வீதி

**மலைமுரசு**



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

## விடுகதைகளும்

01. பச்சை மரகதப் பெட்டிக்குள் முத்துக்கள் வரிசையாய் மின்னுதம்மா
02. மழை வந்தால் பூமி விரித்துக் கொள்ளும் குடை நான்.
03. கல் எறிந்தால் போதும் அரண்மனையே காலியாகி விடும்.
04. தன்னையே கரைத்துக் கொள்வான், இருட்டை விரட்டிடுவான்
05. மரக்கிளையில் தறியோட்டும் சின்னப்பொன்னு நான்.

**விடைகளும்**


01. வெண்டிக்காய்
02. காளான்
03. தேன்கூடு
04. மெழுகுவர்த்தி
05. தூக்கணாங்குருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. உருவிலுள்ள சதுரம் ABCD யில் DX = XY = YC = AW எனின், நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு சதுரம் ABCD யின் பரப்பளவின் என்ன பின்னம்?




02. சதுரமொன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 5அலகுகள் ஆகும். அதன் பரப்பளவு எத்தனை சதுர அலகுகள்?

03. தீர்க்க $\frac{2x+6}{2x-2} + \frac{2x+1}{x-1} = 5$

04. ரூபா 602 விலையுள்ள பொருட்களுக்காக பணத்தை செலுத்துவதற்கு ரூபா 1000 தாளைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதிப் பணம் யாது?

05. 0.00050324 என்னும் எண்ணை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் எழுதுக

06. $x^2 - 6x$ என்பதை நிறைவர்க்கமாக்குவதற்கு கூட்ட வேண்டிய உறுப்பை எழுதுக

07. ஒரு பாடசாலையில் இருக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையேயான விகிதம் 4. : 5 ஆக இருந்தது. பாடசாலையில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 800 எனின், பாடசாலையில் இருக்கும் மொத்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

08. ஒரு தொட்டியில் 2/3 இனை நிரப்புவதற்கு ஒரு நீர்பம்பி 24 நிமிடம் எடுத்தால், தொட்டியின் அரைவாசியினை நிரப்புவதற்கு பம்பி எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

## பாடம் : வரலாறு

01.

1) காரணகாரிய அடிப்படையில் செயற்பட்ட 3கிராம வகைகளும் எவை?
2) கைத்தொழில் புரட்சி என்பது ஒரு தொடர் நிகழ்வாகும் இதனை காரணிகளை குறிப்பிட்டு விளக்குக?
3) கி.பி1766 ஒப்பந்தத்தின் விளைவுகளை குறிப்பிட்டு ஆராய்க?
4) 1978 அரசியல் யாப்பின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு கபணப்பட்ட அதிகாரங்களை விளக்குக?
5) லிபரல்வாதம் மானுடவாதம் வர்க்கபேதம் என்பவற்றை விளக்குக?

02.

1) சர்வஜனவாக்குரிமை வழங்கப்பட்டமையில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் எவை?
2) இலங்கையின் கற்கால மனிதனின் சுற்றாடல் வலயங்கள் எவை?
3) கற்கால மனிதனின் (1) உணவுப்பழக்கவழக்கம்
(2) தொழில்நுட்பம்
(3) வாழ்க்கை முறை என்பன பற்றி ஆராய்க?
4) உலர் வலயத்தில் காணப்பட்ட மண் வகையை குறிப்பிட்டு விவவாய நடவடிக்கை பற்றி தெளிவுபடுத்துக?
5) சோழர்கள் அனுராதபுர இராச்சியத்தை கைப்பற்ற உதவிய காரணிகள்?

03.

1) தேசிய அரசுகள் தோற்றம் பெறக்காரணம் யாது?
2) 18ம் நூற்றாண்டில் பிரான்ஸ் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திய பிரதேசம் யாது?
3) ஐரோப்பியர் பேரரசுகளைப் பரப்புவதற்கான காரணம் யாது?
4) நாடுகாண் பயணங்களை ஆரம்பித்த ஐரோப்பியர்களின் பிரதான நோக்கம் யாது?
5) 20ம் நூற்றாண்டில் ஸ்பானியா எந்த பிரதேசத்தை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தது?

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

***Underline the most suitable word in the brackets.***

It is a well known fact that an advertisement must be (1) ...................... (attractive / attract / attraction ). It must get the (2) ...................... \9attend / attention / attendant) of the reader or the viewer.

The language of an advertisement must be clear and (3) ...................... (easily / easiness / easy) understood.

The reader or the viewer must be able to (4) ......................... (response / respondent / respond) to the advertisement.

So (5) .............. (beauty / beautiful / beautify ) words are a must in an advertisement.

An advertisement which doesn't persuade people to buy a product is a (6) ............................ (fail / failing / failure).

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**தெரிநிலை வினைமுற்று விகுதிகள்**

நடந்தனன் (அன்) ஆண்பால் விகுதிகள்
நடந்தனள் (அள்) பெண்பால் விகுதிகள்
நடந்தாள் (ஆள்)
நடந்தனர் (அர்) - பலர்பால்
நடந்தார் (ஆர்) - ஆண் பெண் பொது
நடந்தது (து) - அ∴றிணை
நடந்தன (அ) - அ∴றிணை
நடந்தேன் (ஏன்) - தன்மை ஒருமை
நடந்தனை (ஐ) - முன்னிலை ஒருமை
நடந்தாய் (ஆய்) - முன்னிலை ஒருமை
நடந்தீர் (ஈர்) - முன்னிலைப் பன்மை
நடப்போம் (ஓம்) - தன்மை பன்மை
நடத்தி (இ) - ஏவல் ஒருமை
நடமின் (மின்) - ஏவல் பன்மை
நடந்தனர் (அர்) - படர்க்கை பன்மை

**குறிப்புவினைமுற்று விகுதிகள்**

கரியன் (அன்) கரியன (அ)
கரியள் (அள்) கரிது (து)
கரியள் (அர்) வில்லி (இ)

**தெரிநிலை வினைப்பெயரெச்ச விகுதிகள்**

செய்த (அ) செய்கின்ற (அ) செய்யும் (உம்)

**குறிப்புவினைப்பெயரெச்ச விகுதிகள்**

கரிய (அ)

**தெரிநிலைவினையெச்ச விகுதிகள்**

நடந்து (உ) ஓடி (இ) உண்ணா (ஆ)



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

### கட்டுரை வினாக்கள்

02.

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| A | | | B | | | C | |
| | D | | | | | G | E |
| | | | | | | | |

1. ஓரணு வாயு எது?

2. உருகுநிலை உயர்வான மூலகம் எது?

3. மூலகங்கள் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது? எவ்வகைப் பிணைப்பை உடையது?

4. மூலகம் G யின் அயனின் இலத்திரன் நிலையமைப்பை வரைந்து காட்டுக.

5. பங்கீட்டு வலுச்சேர்வைக்கும், அயன் சேர்வைக்கும் இடையிலான வேறுபாடு 2 தருக.

6. ஆவர்த்தன அட்டவணையில் ஆவர்த்தனத்தின் வழியே உருகுநிலைக்கு யாது நிகழும்?

7. பின்வரும் பிரசினங்களைத் தீர்க்குக.
அ. 88 g திணிவுடைய $CO_2$ வின் மூல் எண்ணிக்கை யாது?

ஆ. ஒட்சிசன் அணுவொன்றின் உண்மையான திணிவு $2.66 \times 10^{-23}$g ஆகும். காபன் அணுவொன்றின் உண்மையான திணிவு $1.70 \times 10^{-23}$g ஆகும். இதனடிப்படையில் ஒட்சிசனின் சாரணுத்திணிவு யாது?

இ. குளுக்கோஸ், யூரியா, அமோனியா போன்ற சூத்திரங்களை எழுதி அவற்றின் சாரணுத்திணிவுகளையும் காண்க.

ஈ. 5 மூலக்கூற்று மூல் காபனீரொட்சைட்டில் அடங்கியுள்ள
(1) மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் காண்க.
(2) மொத்த அணுக்களின் எண்ணிக்கையைக் காண்க.
(3) ஒட்சிசன் அணுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

ஆசிரியர் . திரு.த.சேகரன்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் மாணவர்....

தாக்குதல் நடத்தப்பட்டதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் - பட்ட மாணவர்கள் தமது உறவினர் இடம் தெரிவித்திருப்பதுள்ளனர்.

சித்த மருத்துவத்துறையில் கல்வி - கற்றுவரும் ஹயக்கிரீவன், பிரணவன், தருஜன், விதூசன், அனோஜன், செல்வின், சுமந்தன், குமரன், சுரேன் ஆகிய மாணவர்கள் கட்டைகளால் தாக்குதலுக்கு இலக்காகி வைத்திய - சாலையில் அனுமதிக்கப் - பட்டிருப்பதுடன் அவர்களுள் தருஜன் மற்றும் விதூசன் ஆகியோர் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

சித்த மருத்துவத்துறைக்குத் தேர்வாகி வந்த சிங்கள மாணவர் ஒருவர் ஆறுவருடகால சித்த மருத்துவத்துறைக் கல்வியைக் கற்க முடியாது எனக்கூறி பல்கலைக் - கழகத்தை விட்டு வெளியேறிய-தாகவும், அவ்வாறு அவர் வெளியேறியமைக்கு சித்த மருத்துவத்துறையின் தமிழ் மாணவர்களே காரணம் எனக் கூறியே தாக்குதல் நடத்தப்பட்ட-தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நடைபெற்ற சம்பவத்தை மூடி மறைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுவதாகவும் காவல்துறையினர் காயமடைந்த மாணவர்களை ஊடகவியலாளர்களிடம் பேச அனுமதிக்கவில்லை என்பதுடன் ஊடகவியலாளர்கள் செய்திகளைச் சேகரிக்கத் தடையாக இருந்ததாகவும் வைத்தியசாலைக்குச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து இத்தாக்குதல் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுக்க பல்கலைக்கழக நிர்வாகம் உட்படக் காவல்துறையும் தயங்குகின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

### காணாமலாக்கப்....

கையெழுத்து வைத்தீர்கள். எனினும் அச்சமவாயத்தின் கீழ் எதுவித நடவடிக்கை களையும் நீங்கள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. காணாமலாக்கப் - பட்டோருக்கு வழங்கவேண்டிய சான்றிதழ் தொடர்பாக ஐநாவின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டீர்களே அதற்கு என்ன ஆனது.

காணாமலாக்கபட்ட சான்றிதழானது மரணச்சான்றிதழை விட முற்றிலும் வேறானது. சான்றிதழின் அடிப்படையில் காணாமலாக்கப்பட்டவர் இந்த உலகில் இல்லை என ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆனால் இச்சான்றிதழைக் கொண்டு நிவாரணங்கள், மரபுவழிச் சொத்துக்கள் உட்படத் தமக்கு ரித்தான பலவற்றை காணாமலாக்கப்பட்டவர்களால் அவதியுறுபவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். சான்றிதழைக் கொண்டு அவர்கள் தமது வாழ்வை மீளமைக்க முடிவதால் இச்சான்றிதழ் உண்மையிலேயே மிகவும் வலிதான சான்றிதழாகும்.

இச்சான்றிதழுக்கு இன்று என்ன நடந்துள்ளது?" என்று கேள்வி எழுப்பிய சம்பந்தன் "காணாமலாக்கப்பட்டமைக்கான அடிப்படைப் பொறுப்பு அரசையே சாரும். ஏனெனில் இந்நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் அரசின் சார்பில் செயற்பட்ட முகவர்களே! அதேவேளை விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்து காணாமலாக்கப்பட்டவர்களின் மீதான கரிசனையையும் நாம் கொண்டுள்ளோம். அவ்வாறானவர்களை நாம் சிலவேளைகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலுக்குள் கொண்டுவரவில்லை. ஆனால் அரசினால் காணாமலாக்கபட்டவர்களிற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டியுள்ளதுடன் சாத்தியப்படுமிடத்து விடுதலைப் புலிகளால் காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் ரொபறுப்பும் அரசிற்கு உண்டு'' என சம்பந்தன் அவையில் தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் நீண்ட உரையாற்றிக்கொண்டிருந்த போது அதற்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பில் இருந்த எவரும் அவையில் இருக்கவில்லை என தேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இனப்பிரச்சனை....

பிரேரணைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது என்று தெரியவில்லை என கூறிய சுரேஸ் பிரேமச்சந்திரன், மக்களை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஏமாற்றியுள்ளதாகவும் கூறினார்.

வடக்கு கிழக்கு இணைந்த சம்'டி முறையிலான ஆட்சிமுறைதான் இனப்பிரச்சினைக்கு தீர்வு என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒற்றையாட்சியின் கீழான தீர்வொன்றுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு இணங்கியுள்ளது.

கூட்டமைப்பின் இந்த செயற்பாடானது தமிழ் தரப்பின் பலவீனமான அரசியல் செயற்பாடு என்றும், மக்கள் தற்போது கூட்டமைப்பின் இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகளை புரிந்துகொண்டு - ள்ளதாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

### சிங்களவர்களை...

முதற்கட்டமாக அங்கு வாழும் சிங்கள மக்களை அகற்றிவிடவும், ஏற்கனவே போரினால் இடம் பெயர்ந்த சிங்கள மக்களின் மீள்குடியேற்றத்தை தடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

"வவுனியாவிலும், வெலிஓயாவிலும் சிங்களக் கல்வி வலயங்களை அமைக்கும் பணிகள் தடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் வெற்றிடமாகவுள்ள ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படாமலுள்ளன. அதற்கும் மேலதிகமாக அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களில் சிங்கள மக்கள் உள்ளீர்க்கப்படாமலுள்ளதுடன், ஏற்கனவேயுள்ள சிங்கள உத்தியோகத் - தர்களை இடமாற்றும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

சிங்கள மக்களிடமிருந்து பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்ட காணிகளிலேயே தற்போது தமிழ் மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்-படுகின்றன.

கொக்கிளாயில் நிரந்தரமாக வசித்த 325 மீனவக் குடும்பங்களுக்கு வீடு கட்ட வழங்கப்பட்ட நிதியானது தமிழ் மக்களுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிஸ்டல் அணித்தலைவராக இருந்து தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவராக உள்ள ஒருவர் வவுனியாவிலுள்ள கொக்-எலிய என்ற ஐம்பது ஏக்கர் நிலத்தின் சிங்களக் குடியிருப்புக்களை புல்டோசர் கொண்டு அழித்துள்ளார்" என தேரரின் குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன.

### வெளிமாவட்ட....

பகுதியிலேயே இவ்வாறான நடவடிக்கைகளைத் தெற்கிலிருந்து வரும் மீனவர்கள் முன்னெடுப்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தடுக்கும் முகமாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அவை சாத்தியமற்றுப் போன நிலையில் கடந்த 10-03-2016 புல்மோட்டை, குச்சவெளி, இறக்கக் கண்டி பிரதேசங்களில் வெளிமாவட்ட மீனவர்களால் மிக நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக மீன் பிடி மற்றும் நிரியல் வளத்துறை அமைச்சருடன் திருமலை மாவட்ட. பாரளுமன்ற. உறுப்பினர் எம் எஸ். தௌபீக் பேச்சுக்கலில் ஈடுபட்டார்.

இச்சந்திப்பில் புல்மோட்டை மற்றும் குச்சவெளி பிரதேச மீனவர் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் மிக நீண்ட காலமாக வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள் கின்ற சுமார் ஐம்பது மீனவர்களை மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பது என்ற தீருமானம் எட்டப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர ஏனைய வெளிமாவட்ட மீனவர்களை தடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாக கௌரவ மீன் பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் பாரளுமன்ற உறுப்பினரிடம் உறுதியளித்திருப்ப-தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து குச்சவெளி காவல்-துறையால் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற இரண்டு படகுகள் விடுவிக்கப்பட்டிருப்பதுடன் புதிய படகுகள் தமிழர் மீன்பிப் பிரதேசங் - களில் இறக்கப்படும் வாய்பிருப்பதாகத் தெரிகின்றது.

### அனல் மின்....

ஏற்படப்போகும் ஆபத்துக்கள் சம்பந்தமாக பொது மக்களுக்கு போதிய விழிப்பு - ணர்வை ஏற்படுத்தல், திருகோணமலை மாவட்ட மக்கள் பிரதிநிதிகளை அழைத்து இத்திட்டத்திற்கு எதிராக பிரேரணை ஒன்றை கொண்டு வரவும் இதனை நிறுத்துவதற்கு சகல முயற்சிகளை மேற்கொள்ளவும் அழுத்தம் கொடுத்தல், அனல் மின்சார திட்டத்திற்கு எதிராக சட்ட ரீதியான அணுமுறையை மேற்கொள்ளல், திட்டத்திற்கு எதிராக மாவட்டத்திலுள்ள பொது மக்களை அணிதிரட்டல், இவ்விடயங் - களை செம்மையாக செயற் படுத்துவதற்கு செயலணியொன்றை அடுத்த ஒன்று - கூடலின் போது அமைத்தல் முதலான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அனல் மின்சாரத் திட்டத்தை மக்களின் வாழிடங்களுக்கு அண்மையாக மேற்கொள்வதை நிறுத்துமாறு ஆரம்ப காலம் முதல் பிரதேச பொதுமக்களும் சமூக நல அமைப்புகளும் தொடராக கோரிக்கை விடுத்து வந்தபோதும் பொதுமக்களின் விருப்புக்கு எதிராக திட்டத்தை மேற்கொள்வதில் அரசாங்கம் செயற்பட்டு வருவது குறிப்பிடத் -தக்கது.

## சித்த மருத்துவத்துறை மாணவர்கள் வகுப்புக்களை புறக்கணிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக சித்த மருத்துவபீட மாணவர்கள் ஒன்பது பேர் நேற்று வியாழக் - கிழமை இரவு தாக்குதலுக்-குள்ளானமையைத் தொடர்ந்து, அப்பீட மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் வளாக முதல்வருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் அம்மன்றம் தெரிவித்தது. தொடர்ச்சியாக தமக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல், தாக்குதல்கள் தொடர்பில் முறையாக விசாரணை செய்து தமக்கான நீதி கிடைக்கும்வரை இந்த வகுப்புப் புறக்கணிப்பு தொடருமெனவும் அம்மன்றம் கூறியது.




### உள்ளூராட்சித்....

கூறியுள்ளார்.

எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தன. குளிரூட்டிய அறைகளில் இருந்து கொண்டு எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. அந்த எல்லை நிர்ணயத்தில் பல பிரச்சினைகள் காணப்பட்டன.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன. 6 ஆயிரம் தொகுதிகளின் 2 ஆயிரம் தொகுதிகளின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண காலஅவகாசம் தேவை. இது கட்சியின் பிரச்சினையல்ல. எல்லைகளை நிர்ணயம் செய்து, தேர்தலை நடத்த வரையறை இருக்கின்றது.

மேன்முறையீட்டு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் தேர்தலை நடத்த முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### புதிய திட்டங்க....

துறைகளிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை வளங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் செய்க் சல்மான் பின் கலீபா அல் கலீபா உறுதிய ளித்துள்ளார்.

கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# புனித மாதங்கள்

## (அல் குர் ஆனின் விளக்கம்)



(நபியே!) புனித மாதத்தில் போர் புரிவது பற்றி உம்மிடம் கேட்கின்றனர். அதில் போர் புரிவது பெரும் குற்றமாகும். (எனினும்) அல்லாஹ்வின் பாதையை விட்டும், (மக்களைத்) தடுப்பதும் அவனை நிராகரிப்பதும், மஸ்ஜிதுல் ஹராமை விட்டும் தடுப்பதும் அங்குள்ளோரை அங்கிருந்து வெளியேற்றுவதும் அல்லாஹ்விடத்தில் மிகப்பெரும் குற்றமாகும். மேலும், குழப்பம் விளைவிப்பது கொலையை விடப் பெரும் குற்றமாகும் என்று (நபியே!) நீர் கூறுவீராக! அவர்களுக்கு முடியுமானால் உங்கள் மார்க்கத்தை விட்டும் உங்களைத் திருப்புகின்ற வரை உங்களுடன் அவர்கள் போரிட்டுக் கொண்டேயிருப்பார்கள். உங்களில் எவர் தனது மார்க்கத்தை விட்டும் மாறி காபிராக மரணித்தும் விடுகின்றாரோ, அவர்களது செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் அழிந்துவிடும். அவர்கள் நரகவாசிகளாவர். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். (2:217)

இந்த வசனமும் புனித மாதங்களில் போர் செய்வது கொடிய குற்றம் என்பதை உறுதி செய்கின்றது. மக்கத்துக் காபிர்களின் செயற்பாடுகளுடன் ஒப்பிடும் போது அது ஒன்றும் பெரிதில்லை என்று கூறப்படுகின்றது. எதிரிகளுடனும் போர்க் களத்தில் கூட வரம்பு மீறாது நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்தியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். அடுத்து, புனித மாதங்கள் பற்றி அல்குர்ஆன் பேசினாலும் அம்மாதங்கள் எவையென அல்குர்ஆனில் கூறப்படவில்லை. அவை துல்க.்தா, துல்ஹஜ், முஹர்ரம் மற்றும் ரஜப் மாதங்களாகும். இது குறித்து குர்ஆன் மட்டும் போதும், நபிமொழி தேவையில்லை என்று வாதிடும் வழிகேடர்களால் நபிமொழிகளின் துணை இல்லாமல் அந்த நான்கு மாதங்களும் எவை என்பதைக் கண்டறியவே முதுடியாது. இதிலிருந்து குர்ஆன் மட்டுமன்றி நபிமொழியும் வஹீ எனும் வேத வெளிப்பாடுதான் என்ற உண்மையையும் உறுதி செய்துகொள்ளலாம்.

முற்றும் .. ..


– இஸ்மையில் ஸலஃபி –

# ஜெபம்

**கோவிலுக்கே செல்லாதவர்களின் நிலை என்ன?**

கோவிலுக்குச் செல்வதால் மட்டுமே மோட்சம் சென்றுவிட முடியாது. அல்லது கோவிலுக்குச் செல்லாதவர்கள் அனைவரும் நரகத்திற்குச் செல்வார்கள் என்று கூறிவிடவும் முடியாது. கிறிஸ்தவன் தன்னுடைய விசுவாசத்தாலும் வாழ்கையாலுமே கிறிஸ்தவனாக முடியும். கிறிஸ்துவில் வாழ வழிகாட்டுதலும் பலமும் சக்தியும் கோவிலில் கிடைக்கிறது. அதோடு நாம் அனைவரும் கடவுளின் அன்புமக்கள் என்ற உணர்வும் அனைவரும் சேர்ந்து ஜெபிக்கும் பேறும் நமக்கு கிடைக்கிறது. கோவிலுக்குச் செல்லாதவர்கள் இதைஎல்லாம் இழந்து நிற்கின்றார்கள்.

இக்காலத்தில் தமது நீதியைக் கடவுள் பொறுமையோடு காட்டி வருகிறார். ஆம், அவர் நீதியுள்ளவர். இயேசுவின் மீது நம்பிக்கை கொள்வோரைத் .தமக்கு ஏற்புடையவராக்கி வருகிறார். அப்படியிருக்க, பெருமை பாராட்ட இடமேது? இடமில்லை. எந்த அடிப்படையில் பெருமைபாராட்ட இடமில்லை? செயல்களின் அடிப்படையிலா? இல்லை நம்பிக்கையின்



அடிப்படையில்தான். ஏனெனில் திருச்சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, இயேசுவின்மீது வைக்கும் நம்பிக்கையின் வாயிலாகவே எவரும் கடவுளுக்கு ஏற்புடையவராக முடியும் எனக் கருதுகிறோம். -உரோமையர் 3:26-28

வானதுாதர்களை கடவுள் படைத்ததாக விவிலியத்தில் சொல்லப்படவில்லை. அவர்களைப் படைத்தது யார்?




www.bible.me

# குறுக்கெழுத்து புதிர் 10

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 14 | ■ | ■ | 2 | 15 டா | 16 | |
| ■ | 3 | | 17 | 4 க | | | | 18 |
| 5 | ரி | | | | | | | |
| | 6 | | 19 | ■ | | ■ | | ■ |
| | | 7 தி | | | ■ | 8 | 20 | |
| ■ | | | | ■ | 9 அ | | | று |
| 10 | 21 வ | | ■ | 22 | | 11 | | |
| ■ | 12 | | | க் | | | | ■ |
| 13 ச | | | | | | | ■ | ■ |

முடிவுத் திகதி : 18.03.2016

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ. கடற்கரைக்காட்சி வீதி. திருகோணமலை.***

### இடமிருந்து வலமாக

1. வெட்டப் பயன்படும்
2. சிறிய குளம்
3. இராவணனின் தங்கை
4. கற்களை உடைக்கப் பயன்படும்
5. அழகான பெண் - வலமிருந்து இடமாக
6. வயிற்றைப் பிரட்டினால் வரும்
7. காளையின உயர்ந்த பகுதி
8. முகச்சுளிப்பு
9. செலுத்த அல்லது பெறவேண்டியது
10. அன்பே.... எனக் சொல்வர்
11. பூக்களைத் தொடுத்து எடுப்பது
12. இலங்கையைக் கைப்பற்றிய முன்னோடி
13. இடித்து பாண், ரொட்டியுடன் தொட்டுச் சாப்பிடுவது

### மேலிருந்து கீழாக

2. குற்றத்தை நிரூபிக்கத் தேவை
4. விறகை எரித்தால் வரும்
5. தசரதனின் மனைவி
6. அரிசியில்லா நெல்
8. சுதி பிறலாத இசை
9. அதிகாரம் உள்ளவர்கள்
14. ஆஜானுபாகு விற்கு ஒத்த சொல்
15. நடிகையின் பெயர்
16. மண்டையோடு
17. சிறையில் இருப்பவர்
18. நிலவில் இருப்பது - கீழிருந்து மேலாக
19. மற்றவை மதியாத தன்மை
20. நெருப்பைத் தொட்டால் கிடைக்கும்
21. தேர் இழுக்கத் தேவை
22. பங்களாதேஸ் தலைநகரம்

### 09 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | ன | 15 சா | ட் | 2 சி | 16 வ | ப் | பு | 17 த |
| 3 ர | ப | ந் | த | 20 ன் | டு | ■ | ■ | தே |
| வு | ■ | 4 த | ண் | ட | 23 வா | ள | ம் | ம |
| 18 ரி | ■ | 5 ம் | த | 21 சீ | ன | ■ | ■ | 25 மு |
| 6 ம் | ப | 19 ரு | வ | ஸ் | 7 வி | க | ல் | க் |
| ■ | ■ | 8 ப | ந் | 9 த | ல் | க | 24 வ | க |
| 10 த | ள | 11 வா | டி | 22 வீ | டு | ■ | ள் | ண் |
| யி | ■ | 12 ஹி | ரு | ணி | க் | கா | ள | ண |
| ர் | ■ | 13 னி | ம | 14 த | க | ர | ம் | ன் |

**பரிசு பெறுபவர்கள்**

எம்.பி.அகிலன். 30 கல்லூரி வீதி

ஜே.நிரோஷினி. 32/4 மத்தியவீதி. உவர்மலை

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

# இவ்வார இராசி பலன்



**மேஷம்** : வளர்ச்சிப் பாதைக்கான புதிய வழி பிறக்கும். பணிகளை ஆர்வமுடன் மேற்கொள்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.



**ரிஷபம்** : பணிகளை நிதானத்துடன் நிறைவேற்றவும். வீண்பேச்சு பேசுபவரிடம் விலகவும். போட்டி குறையும். ஆதாய பண வரவை சேமிப்பீர்கள்.



**மிதுனம்** : வாழ்வில் முன்னேற்றம் பெற, லட்சிய எண்ணத்துடன் பணிபுரிவீர்கள். பேசும் வார்த்தை மங்களகரமாகும். வழக்கு, விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும்.



**கடகம்**:உற்சாக மனதுடன் வளர்ச்சிப் பாதையில் நடை போடுவீர்கள். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமயோசித புத்தியால் அவற்றை சமாளிப்பீர்கள்.



**சிம்மம்**:கடினமான திட்டங்களை செயல்படுத்துவதை தவிர்த்தால், மன அமைதியை பாதுகாக்கலாம். சீராக பணவரவு கிடைக்கும். பணியில் குளறுபடி வராமல் செயல்படவும்.



**கன்னி**:திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். போட்டி குறைந்து வளர்ச்சி அடைவீர்கள். பணியாளர்கள் திறமையை வளர்த்து முன்னேற்றம் காண்பர்.



**துலாம்** : பழகுபவர்களின் மனமறிந்து பேசுவீர்கள். செயல்கள் சிறப்பாக அமைந்து புகழ் தரும். கடனாக கொடுத்த பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.



**விருச்சிகம்** :உங்களை விட, உங்களைச் சார்ந்தவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதில், அக்கறை கொள்வீர்கள். கடன் வாங்குவதில், மிகுந்த கவனம் தேவை.



**தனுசு** :எண்ணங்களில் புதுமை நிறைந்திருக்கும். பொது இடங்களில், உங்கள் சொல்லுக்கு வரவேற்பு கிடைக்கும். பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.



**மகரம்** :பேச்சு வசீகரமாகும். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். மாணவர்கள் முன்னேறுவர்.



**கும்பம்** :பணத்தேவை அதிகரிக்கும். கடன் வாங்குவதில் நிதானம் வேண்டும். கிடைக்கும் வருமானத்தை பிறர் அபகரிக்க வழியுண்டு. சுமாரான லாபம் இருக்கும்.



**மீனம்** : ஆன்மிகத்தில் ஆர்வம் வளரும். உங்களை எதிர்ப்பவர்கள் திடீரென மனம் மாறியது போல பேசி கவிழ்க்க நினைப்பர். வியாபாரம் செழித்து லாபம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி

முள்ளிப்பொத்தானை
நிரூபர்

முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி 05-03-2016 அன்று அதிபர் A.மஹ்ருப் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்க்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாரளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழு தலைவருமான அப்துல்லா மஹ்ருப் கலந்து சிறப்பித்தார். விளையாட்டுப் போட்டியில் அணிநடை நிகழ்வின் போது இல்லங்களிடையே அதி கூடிய புள்ளிகளை பெற்ற ஸம்ஸ் (320) இல்லத்துக்கு பிரதம அதிதியினால் கேடயம் வழங்கப்பட்டது.

பிரதம அதிதி உரையாற்றும் போது முள்ளிப்பொத்தானையை விரைவில் வலயமாக மாற்றி எனது பங்களிப்பினை கல்விக்கு நூறு வீதம் ஒத்துழைப்பு வழங்குவேன் அத்தோடு இன்னும் மூன்று வருடத்தில் இப்பாடசாலையின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து தருவேன் எனவும் வாக்குறுதியளித்தார்.





## வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி

குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இறக்ககண்டி அல்ஹம்ரா முஸ்லிம் மஹா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி கடந்த சனிக்கிழமை 05.003.2016 ம் திகதி பாடசாலை அதிபர் திரு.சலாஹுதீன் தலைமையில் இடம்பெற்றது



குறித்த நிகழ்வுக்கு பிரதம அதீதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் குழு தலைவருமான ஆர்.எம்.அன்வர் கௌரவ விருந்தினராகவும் திருகோணாமலை வலைய கல்விபணிப்பாளர் திரு.விஜேந்திரன் மற்றும் குச்சவெளி பிரதேச கோட்ட கல்வி அதிகாரி திரு.செல்வநாயகம் சிறப்பு விருந்தினர்களாகவும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர் அன்சார் ஹாஜியார், முன்னாள் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் இஸ்மாயில் ஹாஜியார் மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.





## வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி

முகமது அன்வர்





குச்சவெளி பிரதேச செயலகத் திற்கு உட்பட்ட ''டவைக்கட்டு முஸ்லிம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி புடவைக்கட்டு பொது விளையாட்டு மைதானத்தில் 03.03.2016 ம் திகதி பாடசாலை அதிபர் திருமதி சலாம் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதிகள், கௌரவ அதிதிகள் ஆகியோருடன் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இப்போட்டியின் போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைக்கப்பட்டது.

டென்னிஸ்

## தற்காலிகமாக நீக்கப்பட்டார் மரியா ஷரபோவா

**ர**ஷ்யா டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தியதையடுத்து அவர் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மரியா ஷரபோவா, அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் கலந்து கொள்ளவிருந்த நிலையில் அவருக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. இதில் அவர் விதிமுறைகளுக்கு எதிரான அளவுக்கு அதிகமாக 'மெல்டோனியா' என்னும் ஊக்க மருந்தை பயன்படுத்தியுள்ளார். இந்த மருந்து லாத்வியா நாட்டில் தயாரிக்கப்படுகிறது. ரஷ்யாவில் பலர் இதனை பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் இந்த மருந்தை உபயோகப்படுத்த இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேசைப்பந்தாட்டம்

## தொடர் சம்பியன்ஷிப்

**உ**லக மேசைப்பந்தாட்டச் சம்பியன்ஷிப்ஸ் தொடரில், சீனாவின் ஆண்கள், பெண்கள் அணிகள் மீண்டும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளன. அவ்விரு அணிகளுமே, சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளன. 53ஆவது தடவையாக இடம்பெற்ற இத்தொடர், மலேஷியாவின் கோலாலம்பூரில், கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெற்றன. இதில், ஆண்களுக்கான போட்டிகளில், ஜப்பானை எதிர்கொண்ட சீன அணி, 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிகொண்டு, சம்பியனானது. இது, உலக மேசைப் பந்தாட்டச் சம்பியன்-ஷிப்ஸ் தொடரில், தொடர்ச்சியாக 6ஆவது முறையாக, இறுதிப் போட்டியில் வைத்து ஜப்பானை, சீனா வெற்றிகொள்ளும் தடவையாகும். பெண்களுக்கான போட்டிகளிலும், ஜப்பானை எதிர்கொண்ட சீனா, 3-0 என்ற செட் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றுச் சம்பியன் பட்டம் வென்றது.



கிரிக்கட்

## அதிரடி ஆட்டத்தில் இந்தியா

டி20 உலகக்கிண்ணப் பயிற்சிப் போட்டியில் இந்தியா 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தியது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன்கள் இந்தியாவும், மேற்கிந்திய தீவுகள் அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அதிரடியாக விளையாடி 20 ஓவர் முடிவில் 185 ஓட்டங்கள் குவித்தது. அதிகப்பட்சமாக ரோஹித் சர்மா 98 ஓட்டங்கள் (9 பவுண்டரி, 7 சிக்சர்) எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன் பின்னர் 186 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு தொடக்க வீரர்களாக கெய்லும், ஜார்லசும் ஆடினார்கள். கெய்ல் 11 பந்துகளில் 20 ஓட்டங்கள் எடுத்து வெளியேற, பிராவோ 13 ஓட்டங்களும், ரசூல் 19 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் மேற்கிந்திய தீவுகள் 19.2 ஓவரில் 140 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கால் பந்தாட்டம்

## "ஒப்பந்த முடிவுடன் விலகுவேன்"

தனது ஒப்பந்தம் முடிவடைந்தவுடன் இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியிலிருந்து விலகப்போவதாக அவ்வணியின் நட்சத்திர வீரர் சேர்ஜியோ அக்ரோ தெரிவித்துள்ளார். மன்செஸ்டர் சிற்றி அணியுடன் ஐந்து வருட ஒப்பந்த த்தை ஆர்ஜென்டினா அணியின் தேசிய வீரரான சேர்ஜியோ அக்ரோ கொண்டிருக்கையில், அவரது ஒப்பந்தமானது 2018-19 பருவகாலத்துடன் முடிவடைகிறது.



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டமிருந்து 38 மில்லியன் ஸ்டேர்லிங் பவுன்ஸ்களுக்கு 2011ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட சேர்ஜியோ அக்ரோ, மன்செஸ்டர் சிற்றிக்காக இரண்டு பிறீமியர் லீக் பட்டங்களை வென்ற துடன் 128 கோல்களை அடித்துள்ளார். இது தெளிவாக இருப்பதா-கவும் தான் தனது முதல் கழகமான இன்டிபென்டியன்டிக்கு திரும்பப் போவதாகவும் அங்கே ஓய்வு பெறப்போவதாகவும் 27 வயதான அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இனப்பிரச்சனைத் தீர்வைப் பற்றிப் பேசினால் நீதிமன்றம் செல்வார்கள்"



### சுரேஸ் பிரேமச்சந்திரன்

புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தின் போது இனப்பிரச்சினை தீர்வு குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பேசினால் அதற்கு எதிராக இனவாதக் கட்சிகள் நீதிமன்றம் சென்று தடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஐபிசி தமிழ் செய்திக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய யாப்பு உருவாக்கத்திற்காக நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பு சபையாக மாற்றுவதற்கான பிரேரணையின் முன்னுரையிலிருந்து இனப் - பிரச்சினை தீர்வு என்ற வாசகம் நீக்கப்பட்டுள்ளமை ஆபத்தானது.

அது தொடர்பாக கூட்டமைப்பின் தலைமை அமைதியாக இருந்தது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்களிலும் தமிழ் மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப் படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்படவுள்ள யாப்பிலும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக பேச முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே எந்த அடிப்படையில் இந்த...........

பக் 17

## உள்ளூராட்சித் தேர்தல்கள் எல்லை நிர்ணயத்தின் பின் !!!

எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதால், தேர்தலை நடத்தும் அதிகாரம் இல்லை என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் இதனை................

பக் 17

## வெளிமாவட்ட மீனவர்களுக்கு மீன்பிடி அமைச்சர் ஆதரவு


### ஐம்பது மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி

திருகோணமலையில் நீண்டகாலப்பிரச்சனையாக உள்ள வெளிமாவட்ட மீனவர்களின் மீன்பிடிக்கு ஆதரவாக மத்திய மீன்பிடி அமைச்சர் அனுமதிகளை வழங்க உத்தரவு பிறப்பித் - துள்ளதாகத் தெரிகின்றது.

தெற்குப் பகுதியில் கடல் கடினமாகும் போது அங்கிருந்து இட'ம்பெயரும் மீனவர்கள் கிழக்கில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் தமது மீன்பிடி கடும் பாதிப் - படைவதாகத் திருகோண - மலை மாவட்ட மீனவர்கள் போரக்கொடியுயர்த்தி வருகின்றனர்.

குறிப்பாகப் புல்மோட்டை மற்றும் கும்புறுப்பிட்டி.........

பக் 17



## தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் ஓய்வு

சட்டமா அதிபர் திணைக் - களத்தினால் வழங்கப்பட்ட உறுதிமொழியை அடுத்து கடந்த 18 நாட்களாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரும் நேற்று வெள்ளிக்கிழமை பகல் உண்ணா - விரதத்தைக் கைவிட்டுள்ளனர்.

மிகவிரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் சார்பாக நீதின்றத்தில் நேற்று முன்னிலை - யான சட்டத்தரணி நவாவி உறுதியளித்ததை அடுத்து தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டதாக தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

## அனல் மின் நிலையப் பாதிப்புக்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்

சம்பூரில் அமையவுள்ள அனல் மின்சாரத்திட்டமும் அதனால் பொதுமக்களு - க்கு ஏற்படும் பாதிப்பு - க்களும் சம்பந்தமான கலந்துரையாடலொன்று கடந்த (7) மூதூரில் இடம்பெற்றது.

மூதூர் பீஸ் ஹோம் அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் எஸ்.எச்.அமீர் தலைமையில் திரிசிடி முனீர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் 25ற்கும் அதிகமான சமூக நல சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது அனல் மின்சாரத் திட்டத்தினால்.........

பக் 17

# "புதிய திட்டங்களை கிழக்கில் அமுலாக்குங்கள்"

### கிழக்கின் முதலமைச்சர் தெரிவிப்பு




கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட் மற்றும் பஹ்ரைன் நாட்டு பிரதமரின் முதன்மை ஆலோசகர் செய்க் சல்மான் பின் கலீபா அல் கலீபா குழுவினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு கடந்த புதன்கிழமை கொழும்பு - கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

சந்திப்பில் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட்டினால் கிழக்கு மாகாணத்தில் உள்ள முதலீட்டு வளங்கள் தொடர்பான விடயங்களை எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் உள்ள மீன்பிடித்துறை, சுற்றுலாக் கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளில் பாரிய முன்னேற்றத்தை நவீன முறையில் மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை கிழக்கில் அமைத்துத் தருமாறு முதலமைச்சரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



முதலமைச்சரின் வேண்டுகோளிற்கு அமைவாக செய்க் சல்மான் பின் கலீபா அல் கலீபா கிழக்கிற்கு வருகையொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாட்டில் வளமிக்க மாகாணமாக கிழக்கு மாகாணம் விளங்குவதாகவும், பல்வேறு.....

பக் 17

இவ்வாரந்த பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 12.03.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org